

# சீமெந்து விலை குறைந்தது

02 பக்கம்


Follow us

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 76 சுபகிருது வருடம், புரட்டாசி மாதம் 18ஆம் திகதி புதன்கிழமை
(05.10.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் அவ்வல் - 08 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## வன்முறைகளைக் கட்டுப்படுத்த புதிய சட்டம்

நாட்டில் எதிர்ப்பு நடவடிக்கைகள், ஆர்ப்பாட்டங்கள் என்ற போர்வையில் வன்முறைகள் இடம்பெறுவதனால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு...

02 பக்கம்

## தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி பண்டிகை முற்கொடுப்பனவாக ரூ.15,000



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் கோரிக்கையை ஏற்றது அரசு

(யோ.தர்மராஜ்)

தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுவதற்காக நிறுவனங்களினால் பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கடன் தொகையை 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் கோரிக்கை விடுத்தார்.

தேயிலை சபையின் ஊடாக கடன் திட்டத்துக்கு...

02 பக்கம்

## ரூ. 15,000 வழங்க கம்பனிகள் இணக்கம்

### இ.தொ.கா. அறிவிப்பு

(க.கிஷாந்தன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 15 ஆயிரம் ரூபா வழங்க முதலாளிமார் சம்மேளனம் தீர்மானித்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

02 பக்கம்

## கோதுமை மா, பால்மாவின் விலைகள் அதிகரிப்பு

கோதுமை மா மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால்மா ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சமூக பாதுகாப்பு ஒத்துழைப்பு வரி அறவிடப் பட்டமையைத் தொடர்ந்து கோதுமை மாவை இறக்குமதிசெய்யும் நிறுவனங்கள் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவுக்கான விலையை 13 ரூபாவால் அதிகரித்துள்ளன.

இதனால் , வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலையை அதிகரிக்க நேரிட்டுள்ளதாகவும் அகில இலங்கை...

02 பக்கம்

# அரசியலமைப்பில் திருத்தம் வேண்டாம்!

## பொதுஜன பெரமுனவுக்குள் பெரும் கருத்து முரண்பாடு

(யோ.தர்மராஜ்)

ஆளுந்தரப்புக்குள் 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம் குறித்து கடும் வாக்கு வாதங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. நாட்டின் தற்போதைய நிலையில், அரசியலமைப்புத் திருத்தம் வேண்டாமென உறுப்பினர்கள் பலர் முழுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக ஆளுந்தரப்பின் முன்னாள் அமைச்சர் ஒருவர் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று தெரிவித்தார்.

அத்தோடு, 22ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதா? இல்லையா என்பது குறித்து, நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுடன் இன்று விசேட சந்திப்பொன்றை நடத்தவுள்ளதாகவும்...

02 பக்கம்

## அத்தியாவசிய சேவைகள் சிலவற்றுக்கு வர்த்தமானி

நாட்டில் சில துறைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி, விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கான தடையற்ற சேவைகளை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று முன்தினம் வர்த்தமானி...

02 பக்கம்

## லிட்ரோ எரிவாயு 300 ரூபாவால் குறையும்

02 பக்கம்

## அர்ஜுன மகேந்திரனுடன் சிங்கப்பூரில் மதிய உணவா?

### குற்றச்சாட்டுக்கு ஜனாதிபதி ரணில் சபையில் பதில்

(யோ.தர்மராஜ்)

ஜப்பான் செல்லும் வழியில் அர்ஜுன மகேந்திரனுடன் சிங்கப்பூரில் மதிய உணவு எடுத்துக்கொண்டதாக கூறும் கதை முற்றிலும் பொய் என்பதோடு, அன்றைய தினம் சிங்கப்பூர் எயார்லைன்ஸிலியேயே தான் மதிய உணவை எடுத்துக்கொண்டதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க...

02 பக்கம்

## சரிவின் விளிம்பில் இலங்கை; மன்னிப்புச் சபை எச்சரிக்கை

இலங்கை சரிவின் விளிம்பில் இருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. பொருளாதார நெருக்கடி காரணமாக உணவு, சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு சவால்களுக்கு உள்ளாகியுள்ளதால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவ்வமைப்பு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறிப்பாக, தினசரி ஊதியத்தை நம்பியுள்ளோரும் மலையக தமிழ் சமூகமும் பாதிக்கப் பட்டுள்ளதாக அவ்வமைப்பினால் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்நிலையை ஆபத்தென சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, மக்கள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

02 பக்கம்



### உஷ்

சரத் வீரசேகர எம்.பிக்கு அமைச்சுப்பதவியொன்றை வழங்குமாறு ஜனாதிபதிக்கு பல்வேறு தரப்புகளிலிருந்து அழுத்தங்கள் வழங்கப்பட்டு வருகிறதாம்.

அழுத்தங்களை வழங்கி அமைச்சுப்பதவிகளைப் பெற எவரும் முயற்சிக்கவேண்டாமென, பதிலுக்கு ரணிலும் தகவல் அனுப்பியுள்ளாராம்.

### கமெண்ட் கந்தர்..




## ஐ.நா. புதிய தீர்மானத்துக்கு இந்தியாவின் ஆதரவு அவசியம்!

### பா.ம.க. தலைவர் ராமதாஸ் வலியுறுத்து

இலங்கை போர்க்குற்ற விசாரணையை இந்தியாவில் நடத்துவதற்கான தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நமது நாடு ஆதரிக்க வேண்டும் என்று பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்...

02 பக்கம்

## 21ஆவது திருத்தம் வந்தால் ஐ.ம.ச. முழுமையான ஆதரவு

### நாடாளுமன்றில் சஜித் அறிவிப்பு

யோ.தர்மராஜ்)

நாடாளுமன்றத்தில் 22ஆவது திருத்தத்தை முன்வைப்பதற்கு ஆளுந்தரப்புக்குள் இணக்கப்பாடு இல்லையேல், நாங்கள் முன்வைத்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கும்...

02 பக்கம்




# கோப் தலைவர் பதவிக்கு சரித்த; எதிர்க்கட்சி முன்மொழிவு

(யோ.தர்மராஜ்)

கோப் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து ஹர்ஷ டி சில்வா விலகியுள்ளதால் அந்த இடைவெளிக்கு முன்னாள் கோப் குழு தலைவர் சரித்த ஹேரத்தை நியமிக்குமாறு தான் கோரிக்கைவிடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (04) ஆரம்பமான சபை அமர்வில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கோப் மற்றும் கோபா குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனம் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கோரிக்கைவிடுத்தார்.

இங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்திலுள்ள அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு (கோப்) நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவின் பெயரை நாங்கள் முன் வைத்திருந்தோம். ஆனால், அவர் அக்குழுவிலிருந்து சுயாதீனமாக விலகுகின்றார். அவருடைய இடைவெளிக்கு கோப் குழுவின் முன்னாள் தலைவராக செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத்தை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

இதேவேளை, கோப் மற்றும் கோபா குழுவின் தலைமைத்துவத்தை எதிர்க்கட்சிக்கு வழங்குமாறு நாங்கள் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்தோம். குறிப்பாக, நாடாளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹசிம் மற்றும் எரான் விக்கிரமரத்ன ஆகியோருக்கு அந்த தலைமை பதவிகளை வழங்குமாறு கோரினோம். இதனை சபாநாயகரும் ஜனாதிபதியும் பிரதமரும் ஏற்றுக்கொண்டனர் - என்றார்.

## அத்தியாவசிய...

அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, மின்சாரம் வழங்கல் தொடர்பான சேவைகள், பெற்றோலிய உற்பத்தி, எரிபொருள் வழங்கல், விநியோகம், வைத்தியசாலை மற்றும் மருத்துவம் தொடர்பான பிற சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## வன்முறைகளை...

புதிய சட்டம் இயற்றுவது தொடர்பில் அமைச்சரவையில் ஆராயப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் மற்றும் நிறைவேற்று அதிகாரம் ஆகியவை சுதந்திரமாக தமது பொறுப்புகளை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## சீமெந்து விலை...

சீமெந்து மூடை ஒன்றின் விலையை 100 ரூபாவினால் குறைப்பதற்கு அதன் உற்பத்தி நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

அதனடிப்படையில் நேற்று நள்ளிரவு முதல் 50 கிலோ கிராம் சீமெந்தின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

கட்டிட நிர்மாணத்துறையை முன்கொண்டு செல்லும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன்படி, மூவாயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் 50 கிலோகிராம் சீமெந்து மூடை ஒன்று மூவாயிரத்து 100 ரூபாவாக விலை குறைத்துள்ளது.

## ஐ.நா. புதிய...



கூறியுள்ளதாவது: இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்த வரைவுத் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் கொண்டு வந்துள்ளன. ஈழப்போரில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் குடும்பங்களுக்கு நீதி வழங்கும் நடவடிக்கைகளுக்கு வலு சேர்க்கும் வகையிலான இந்த வரைவுத் தீர்மானம் வரவேற்கத்தக்கதாகும்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமை பேரவையின் 51-ஆவது கூட்டத்தில், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஹாலந்து உள்ளிட்ட 10 உறுப்பு நாடுகளும், உறுப்பினர் அல்லாத 16 நாடுகளும் இணைந்து வரைவுத் தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளன. இலங்கையில் சமாதானம், மனித உரிமைகள், பொறுப்புடைமை ஆகியவற்றை மேம்படுத்துதல் என்ற தலைப்பிலான வரைவுத் தீர்மானத்தில் மொத்தம் 19 அம்சங்கள் இடங்கள் பெற்றுள்ளன. முதல் இரு பத்திகளில் போர்க்குற்றங்கள் தொடர்பான விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமை ஆணையம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை வரவேற்றுள்ள வரைவு தீர்மானம், அடுத்த 5 பத்திகளில் போர்க்குற்ற விசாரணை குறித்த இலங்கையின் நிலையை விமர்சித்துள்ளது.

இத்தகைய சிறப்பு மிக்க தீர்மானம் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும் இந்தியாவுக்கு உண்டு. இலங்கையில் கடந்த 2009ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் கொடூர படுகொலை செய்யப்பட்ட ஒன்றரை இலட்சம் தமிழர்களின் குடும்பங்களுக்கு 13 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் நீதி கிடைக்கவில்லை என்பது மனித உரிமையில் அக்கறை கொண்டவர்கள் அனைவருக்கும் வலியையும், வேதனையையும் ஏற்படுத்துகிறது. இதற்கு முடிவு கட்டி போர்க்குற்றவாளிகளை தண்டிப்பதற்கான ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் நடவடிக்கைகளை இந்திய அரசு ஆதரிக்க வேண்டியது அவசியம் ஆகும்.

அதற்காக ஐ.நா. மனித உரிமை பேரவையில் நடைபெறவுள்ள வாக்கெடுப்பில், இலங்கை போர்க்குற்றம் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன் என்று அன்புமணி தெரிவித்துள்ளார்.

## 21 ஆவது திருத்தம்..

21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முன்வையுங்கள். முழு ஆதரவையும் வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று ஆரம்பமான சபை அமர்வில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் குறித்து ஆளுந்தரப்புகள் ஏற்பட்டுள்ள குழப்பம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் 22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. ஆனால், அதற்கு அமையவே 22 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுமா என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

காரணம், ஆளுந்தரப்பு உறுப்பினர்களின் குழுக்கூட்டத்தில் பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதால் 22 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுமா? குறித்த திருத்தத்தை முன்வைப்பதற்கு ஆளுந்தரப்புக்குள் இணக்கப்பாடுகள் இல்லை என்றால் நாங்கள் முன்வைத்த நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை நீக்கும் 21 ஆவது திருத்தத்தை முன்வையுங்கள். அதற்கு நாங்கள் முழுமையான ஆதரவை வழங்குவோம்.

ஆளுந்தரப்புக்குள் 22 ஆவது திருத்தம் குறித்து பல்வேறு முரண்பாடுகள் இருப்பதாகவும் இதனால் குறித்த திருத்தத்தை முன்வைக்க முடியாத நிலைமை காணப்படுவதாகவும் அறிந்ததால், இது குறித்து அரசாங்கம் தங்களுடைய நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் - என்றார்.

## கோதுமை மா...

வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

இதற்கமைய பாண் ஒரு இறாத்தலின் விலை மேலும் 10 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கோதுமை மாவின் விலையை 250 ரூபாவினால் குறைக்கவுள்ளதாக நேற்றைய தினம் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்.

அத்துடன், கோதுமை மா இறக்குமதியாளர்களிடம் டொலர்கள் இல்லாமை காரணமாகவே கோதுமை மா விலை அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கொள்கலன்கள் கோதுமையுடன் துறைமுகத்தில் தேங்கியிருப்பதாகவும், அவற்றை விடுவித்தால் கோதுமை மாவின் விலை குறைவடையும் எனவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால்மா வகைகளின் விலைகள் இன்று முதல் அதிகரிக்கப்படவுள்ளன. அதன் பிரகாரம் 400 கிராம் பால்மா பைக்கற்று ஒன்றின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 950 ரூபாவுக்கு விற்பனைசெய்யப்படவுள்ளது.

ஒரு கிலோ கிராம் பால்மா பைக்கற்றின் விலை 230 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு இரண்டாயிரத்து 350 ரூபாவுக்கு விற்பனைசெய்யப்படவுள்ளது. மேலும், 400 கிராம் கொழுப்பற்ற பால்மா 210 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை ஆயிரத்து 50 ரூபாவாகும்.



# யாழ்ப்பாணத்தில் SLT-MOBITEL முன்னெடுக்கும் 'இணைக்கும் வசந்தம்' ஊக்குவிப்புத் திட்டம்

யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு புதிதாக அதிவேக இணைய இணைப்புகளையும், PEO தொலைக்காட்சி இணைப்புகளையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும், ஏற்கனவே காணப்படும் தமது இணைப்புகளை மெருகேற்றிக் கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்க இலங்கையின் தேசிய தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்கும் SLT-Mobitel முன்வந்துள்ளது. இதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள SLT-MOBITEL பிராந்திய அலுவலகத்துக்கு அண்மையில் "இணைக்கும் வசந்தம்" எனும் தொனிப் பொருளில் விசேட ஊக்குவிப்பு நிகழ்வை ஒக்டோபர் 3 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை முன்னெடுக்கின்றது.

வட பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு நவீன தொழில்நுட்ப வசதியின் உச்ச பயனைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலும், தமது அன்புக்குரியவர்களுடன் இலகுவாக தொடர்பை ஏற்படுத்தி இணைப்பில் இருப்பதற்கும், உடனுக்குடன் இணையத்தில் தகவல்களை அறிந்து கொள்ளவும், தமக்கு பிடித்த வீடியோக்களை பார்வையிட்டு மகிழவும், தடங்கலில்லாத இணைய வசதிகளை இலகுவான முறையில் பெற்றுக் கொடுப்பதற்காகவும், சிறந்த தொலைக்காட்சி நாளிகை பார்வையிடல் அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலும் இந்தத் திட்டத்தை SLT-MOBITEL ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்வில் புதிய இணைப்புகளைப் பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு பல வெகுமதிகளை வழங்க SLT-MOBITEL முன்வந்துள்ளது. SLT-MOBITEL Fibre இணைப்புகளைப் பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக 100 GB வசதியும், 25 GB YouTube வசதியும் வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் SLT-MOBITEL இன் தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ, குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க, மொபிடெல் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக வித்தாரண மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்த பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.



## சரிவின் விளிம்பில்...

அரசாங்கம் மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளித்து மக்களை பாதிப்பிலிருந்து மீட்பதை உறுதிசெய்ய வேண்டுமெனவும் அவ்வமைப்பு கோரியுள்ளது.

இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளின் உதவியைப் பெற்று முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பில் 57 பக்கங்கள் அடங்கிய அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவ்வமைப்பு மேற்குறித்த விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளது.

## லிட்ரோ எரிவாயு...

நாட்டில் 12.5 கிலோ கிராம் எடையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 200 முதல் 300 ரூபா வரை குறைக்கப்படும் என அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

லிட்ரோ நிறுவனத்தின் கீழ் விநியோகிக்கப்படும் ஏனைய சிலிண்டர்களின் விலைகளும் குறைக்கப்படும் என அதன் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விலைக் குறைப்பானது இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் என அவர் மேலும் குறிப்பிட்டார். உலகளாவிய ரீதியில் எரிவாயுவின் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதன் காரணமாக விலை சூத்திரத்தின் அடிப்படையில் இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## ரூ.15,000 வழங்க...

கண்டியில் நேற்று (04) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரும் துயரங்களைக் கடந்தே தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்கின்றனர்.

மாதாந்த ஊதியத்தையும் சம்பள முற்பணத்தையும் நம்பியே தோட்டத் தொழிலாளர்கள் ஒரு மாதத்தைக் கொண்டு நடத்துகின்றனர். அதிலும் கூட ஒருசில தொழிலாளர் குடும்பங்களில் பிள்ளைகளின் கற்றலுக்கான செலவுடன் ஒரு மாதத்துக்கு போதுமான வருமானமின்றி, ஒரு நேர உணவை மட்டுமே உண்ணுபவர்களும் இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில், தீபாவளிப் பண்டிகைக்காக பெருந்தோட்டங்களில் வழங்கப்படுகின்ற பண்டிகை முற்பணத்தை கருத்திற்கொண்டே தொழிலாளர்கள் தங்களது பண்டிகைக்கான செலவுகளை செய்ய திட்டமிடுவர்.

ஆடம்பரமான கொண்டாட்டங்களாக இல்லாவிட்டாலும் அவர்களது சிறிய சந்தோஷத்துக்காக இந்த பண்டிகை முற்பணத்தை திட்டமிட்டு செலவுசெய்வர். ஆனால், பெருந்தோட்டப் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் இந்த பண்டிகை முற்பணம் முறையாக வழங்கப்படுவதில்லையென்ற குற்றச்சாட்டுகளும் கடந்த காலங்களிலிருந்து இருந்து தான் வருகின்றது. அதுபோலவே இந்த வருடமும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்தப் பிரச்சினைகள் பெரும் துயரத்தைக் கொடுத்துள்ளன.

இதனை கருத்தில் கொண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோரின் பரிந்துரையின் பேரில் நான் முதலாளிமார் சம்மேளனத்துடன் கலந்துரையாடி தீபாவளி முற்பணமாக கடந்த கால தொகையை விட அதிகமாக வழங்குமாறு வலியுறுத்தினேன்.

கடந்த வருடம் 10,000 ரூபா தீபாவளி முற்பணமாக வழங்கியிருந்தனர். இந்த காலகட்டத்தில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக பொருட்களின் விலை உயர்வு போன்றவற்றை கருத்தில் கொண்டு நாம் அதையும் விட அதிகமான தொகையை வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தோம்.

இதனை ஏற்றுக்கொண்ட முதலாளிமார் சம்மேளனம் தோட்ட தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 15,000 ரூபாவை வழங்கத் தீர்மானித்து. அதற்கான சுற்றுநிருபத்தை பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அதற்கமைய பெரும்பாலான கம்பனிகள் தீபாவளி முற்பணமாக 15,000 ரூபாவை வழங்க தீர்மானித்துள்ளன. ஓரிரு கம்பனிகள் இந்த தீபாவளி முற்பணத்தை வழங்க தவறும் பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் மிகவும் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

எனவே, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எப்பொழுதும் மக்களின் நலன் கருதி சேவை செய்யக்கூடிய ஒரு தொழிற்சங்கம் என்று மீண்டும் நிரூபித்துள்ளது என்றார்.

## அர்ஜுன மகேந்திரனுடன்...

நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேவைப்பட்டால் அன்றைய தினம் தான் எடுத்துக்கொண்ட உணவு பட்டியலையும் முன்வைப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று ஆரம்பமான சபை அமர்வில் கலந்துகொண்ட ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர், எஸ்.எம்.மரிக்கார் தனது கருத்தில் ஜனாதிபதி குறித்து தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய எஸ்.எம்.மரிக்கார்,

ஜப்பான் செல்லும் வழியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூரில் ஆறு மணித்தியாலங்கள் தங்கியிருந்தார். அவர் சிங்கப்பூர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரை சந்தித்ததாக செய்திகள் வெளிவந்தன. ஆனால், ஜப்பான் செல்லும் வழியில் சிங்கப்பூரில் இறங்கிய, ஜனாதிபதி அர்ஜுன மகேந்திரனுடன் பகல் உணவை எடுத்துக்கொண்டதாக எங்களுக்கு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன – என்றார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:-

நான் சிங்கப்பூரில் அர்ஜுன மகேந்திரனுடன் பகல் உணவை எடுத்துக்கொண்டதாகக் கூறினார். சிங்கப்பூர் உளநாட்டு அலுவல்கள் அமைச்சருடனே காலை உணவை எடுத்துக்கொண்டேன். பகல் உணவை சிங்கப்பூர் ஏர்லைனிலேயே எடுத்துக்கொண்டேன். அங்கிருந்து நான் பகல் செல்ல வேண்டியிருந்ததால் பகல் உணவை விமானத்திலேயே எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. வேண்டுமாயின், நான் அன்று எடுத்துக் கொண்ட உணவுப் பட்டியலையும் காட்டுகின்றேன். மரிக்கார் எம்.பி. இவ்வாறான பொய்யான கருத்தை வெளியிட்டதற்காக நான் வருந்துகிறேன்.

இதேவேளை, நடுத்தர வர்க்கம் ஒன்று கூடியே தற்போது போராடுவதாக மரிக்கார் எம்.பி கூறினார். பாரிய நெருக்கடியால் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக கூறினார். ஆனால், இதனை இதற்கு முன்னர், ஹிருணிகா பிரேமச்சந்திரவும் கூறினார். இருவரும் ஒரே கருத்தை வெளியிடுகின்றனர். ஆனால், அதில் எனக்கு உடன்பாடில்லை. ஆனால், ஹிருணிகா பிரேமச்சந்திரவின் பாதையில் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் செல்கின்றார் என்பதே எங்களுக்கு தெரிகிறது – என்றார்.

இதற்கு பதிலளித்த எஸ்.எம்.மரிக்கார்:-

நான் பார்க்கவில்லை. ஊடகங்களில் வெளியானதையே நானும் கூறினேன். இதேவேளை, நான் ஹிருணிகா பிரேமச்சந்திரவின் பாதையில் செல்லவுமில்லை. செல்லவு மாட்டேன் - என்றார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:-

அவ்வாறு செல்லவில்லை என்றால் என்னுடன் இணைந்து பயணியுங்கள் - என்றார்.

## அரசியலமைப்பில் திருத்தம்...

அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மீதான விவாதத்துக்காக நாளை 06 மற்றும் நாளை மறுதினம் 07 ஆம் திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆளுந்தரப்பு கூட்டத்திலும் 22 ஆவது திருத்தம் குறித்து ஆளுந்தரப்பு உறுப்பினர்களிடையே கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக கொண்டுவரப்படவுள்ள அரசியலமைப்பு பேரவை குறித்து தனக்கு சில சந்தேகங்கள் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, பலரும் 22 ஆவது திருத்தத்தை தற்போது கொண்டுவர வேண்டிய தேவையில்லையென சுட்டிக்காட்டியதையடுத்து, 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் குறித்து தங்களுடைய நிலைப்பாடுகளை தெரிவிப்பதற்கு விசேட சந்திப்பொன்றையும் ஏற்பாடு செய்யுமாறும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர். அதற்கமைய, நேற்று பிற்பகல் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது, கருத்து தெரிவித்த சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும், புதிய அரசியலமைப்பு திருத்தத்திற்கே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு 2/3 பெரும்பான்மை பலத்தை மக்கள் கொடுத்தனர். அதனால், புதிய அரசியலமைப்பு திருத்தத்தை உருவாக்குவதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டு, புதிய வரைபும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், நாங்கள் புதிய அரசியலமைப்பு திருத்தம் குறித்து அவதானம் செலுத்த வேண்டுமெ தவிர அரசியலமைப்பு திருத்தங்களை கொண்டுவர வேண்டியதில்லை என சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்தோடு, அரசியலமைப்பு திருத்தங்கள் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைப்பதற்கும் நாங்கள் இடமளிக்க முடியாது. மேலும், இந்த 22 ஆவது திருத்தத்தின் ஊடாக 13 ஆவது திருத்தத்தை பலப்படுத்துவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அதற்கு நாங்கள் ஒருபோதும் ஆதரவளிக்க முடியாது என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிலைமைக்கு அமைய தற்போது 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை கொண்டுவர வேண்டியதில்லை. ஒரு வேளை, அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்படுமாக இருந்தால் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் நீக்கப்பட வேண்டும். அதனை விடுத்து, 13 ஐ பலப்படுத்த முயற்சித்தால் 22 ஆவது திருத்தத்தின் மீதான வாக்கெடுப்பின் போது பிளவுகளை சந்திக்க நேரிடும் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மற்றும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர ஆகியோர் எச்சரிக்கைவிடுத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து 22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நாடாளுமன்றத்திற்கு கொண்டுவர வேண்டாம் என ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளதையடுத்து, அது குறித்து நீதி அமைச்சருடன் கலந்துரையாடுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, 22 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதா இல்லையா என்பது குறித்து, ஆளுந்தரப்பு உறுப்பினர்கள், நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுடன் இன்று விசேட சந்திப்பொன்றை முன்னெடுக்கவுள்ளனர். எது எவ்வாறாயினும் 22 ஆவது திருத்தத்தை தற்போது நாடாளுமன்றத்திற்கு கொண்டுவர வேண்டாம் என்ற நிலைப்பாட்டிலேயே ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் இருப்பதாக முன்னாள் அமைச்சர் ஒருவர் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார். இதேவேளை, 22 ஆவது திருத்தச்சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமானால் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன உறுப்பினர்கள் அதற்கு ஆதரவளிக்க மாட்டார்கள் என அறியமுடிந்தது.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு...

அமைய கொடுப்பனவை வழங்குவதற்கானநடவடிக்கையை எடுக்குமாறு தேயிலை சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ்பத்திரண, சஜித் பிரேமதாசவுக்கு பதிலளித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்ப அபேவர்தன தலைமையில் நேற்று (04) ஆரம்பமான சபை அமர்வில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் பெருந்தோட்ட மக்களுக்கான தீபாவளி கொடுப்பனவு குறித்து கேள்வி எழுப்பிய போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கைவிடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

தீபாவளி பண்டிகை என்பது இந்துக்களின் பிரதான பண்டிகையாகும். பெருந்தோட்டத்துறையிலுள்ள இந்துக்களுக்கு தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதற்காக 5 ஆயிரம் ரூபா கடன் தொகையினை பெருந்தோட்ட நிறுவனங்கள் வழங்கிவருகின்றன. ஆனால், நாட்டில் தற்போது காணப்படுகின்ற நெருக்கடிகளுக்கு அமைய தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதற்கு அந்த தொகை போதுமானதல்ல.

எனவே, பெருந்தோட்ட மக்கள் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியாக கொண்டாடுவதற்காக அவர்களுக்கு வழங்கும் கொடுப்பனவை 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு பணிப்புரை விடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மக்களுக்கு வழங்கும் கொடுப்பனவு கடன் தொகை என்பதால், தேயிலை சபையின் ஊடாக அரசாங்கம் தலையிட்டு அவர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ரமேஷ் பத்திரண,

எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடயம் குறித்து நாங்கள் ஏற்கனவே கவனம் செலுத்தியுள்ளோம். அதன்படி, கடன் திட்டத்துக்கு அமைய அவர்களுக்கான நிதியை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தேயிலை சபைக்கும் அறிவித்துள்ளோம் - என்றார்.





நவராத்திரியை முன்னிட்டு சரஸ்வதி பூஜை நேற்று(04) 'தமிழன்' பத்திரிகை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவன பணிப்பாளர் மாதவ மடவல, பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் சந்திரசேன மற்றும் ஆசிரிய பீட பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

**(படப்பிடிப்பு- கிரிஷான் காரியவசம்)**

## இ.தொ.கா - மலேசிய உயர்ஸ்தானிகர் சந்திப்பு



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் மலேசிய உயர்ஸ்தானிகர் டடோ டான் யாங் தாய்க்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது, இலங்கை மற்றும் மலேசியாவுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும், ஹட்டனிலுள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற்ற இளைஞர்களை புதிதாக மலேசிய அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட கோட்டா முறை மூலம் உள்வாங்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## மாணவர் போராட்டத்தில் கண்ணீர்ப்புகை பிரயோகம்

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்று (04) களனி பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட பேரணி மீது பொலிஸாரினால் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த் தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிரிபத்கொடை, களனி பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமாகியிருந்தது.

களனி, தளுகம பிரதேசத்தில் வைத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இவ்வாறு கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கருத்து கந்தசாமி


**ஜனாதிபதி ரணில் சிங்கப்பூர் ஊடாக ஜப்பான் சென்றபோது சிங்கப்பூரில் அர்ஜூன் மகேந்திரனை சந்தித்ததாக செய்தியொன்று உலவியதே? ஆனால், நேற்று அதனை பார்லிமென்ட்டில் மறுத்திருக்கிறார் ஜனாதிபதி.**

**அர்ஜூன் மகேந்திரனை சந்தித்திருந்தால் அதனை நாலு பேருக்குத் தெரியும்படியா சந்தித்திருப்பார் ரணில். ஊடகங்கள் செய்தி போடமுன்னர் ரணிலின் அந்த நரிமூளையைப் பற்றி யோசித்து செய்திகளை போடவேண்டாமா?**

**இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் ரணில் மீது எதாவது குற்றச்சாட்டு இருக்கிறதா? அல்லது ஈஸ்ரர் குண்டுத்தாக்குதல் சம்பவ பொறுப்பு மீறல் தொடர்பில் எந்த குற்றச்சாட்டாவது ரணில் மீது உள்ளதா?**

**ஒரே பார்லிமென்ட் சீட்டை வைத்து ஜனாதிபதி ஆகிய ஒருவரைப் பற்றி விமர்சனம் செய்யும்போது ஆதாரங்களுடன் செய்யவேண்டும். நான் ரணில் ஆதரவாளன் அல்ல. ஆனால், உண்மையைச் சொல்லவேண்டுமே!**





தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஒக்டோபர் 05 ஆம் திகதி, புதன்கிழமை

# பெருந்தோட்ட மக்களுக்கு சம்பளம் மட்டும் பிரச்சினையல்ல

மலையகத்தில் அவ்வப்போது நிலவும் மழையுடனான காலநிலை மக்களுக்கு பேராபத்தாக மாறியுள்ளது. மலைமேடுகள் என்பதாலும் முறையான வடிகான் அமைப்புகள் இல்லாமையினாலும் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

பத்தனையில் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி மூன்று பிள்ளைகளின் தாயொருவர் உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் கவலையை உண்டுபண்ணியுள்ளது.

திம்புள்ள – பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மவுண்ட்வேர்ணன் மேற்பிரிவு தோட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மண்சரிவில் 46 வயதான இராமசாமி காளியம்மா என்பவரே இந்தத் துயரத்துக்கு முகங்கொடுத்துள்ளார்.

நாவலப்பிட்டியில் கடந்த ஓகஸ்ட் மாதம் ஆண்கள் இருவரும் பெண்ணொருவரும் ஆற்றைக் கடக்க முற்பட்டு உயிரிழந்தனர். அதே காலப்பகுதியில் பொல்பிட்டியவில் வயோதிபப் பெண்ணொருவரும் ஐந்து வயது சிறுமியும் நீரில் மூழ்கி காணாமல் போனதுடன், அவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இவை அண்மைக்காலமாக இடம்பெற்ற துயரச் சம்பவங்களாகும். இந்நிலையில், மற்றுமொரு மரணம் இடம்பெற்றிருக்கிறது.

நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் தொடர்ச்சியாக மழை பெய்துவருவதால் பல்வேறு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேகாலை, நுவரெலியா, கண்டி ஆகிய மாவட்டங்களில் கடந்த மூன்று நாட்களில் மாத்திரம் 104 குடும்பங்களைச் சேர்ந்த 422 பேர் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், 26 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இவ்வாறானதொரு நிலையில், மலையகத்தில் மண்சரிவால் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். இது குறித்து ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மண்சரிவு அபாயத்தில் வாழ்ந்த காளியம்மா உயிரிழந்ததைப் போன்று மேலும் ஆபத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் குறித்து பிரதமருடன் கலந்துரையாடியுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியதாகவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் நகரில் மழையில் நீர் வழிந்தோடும்போது மாணவர்கள் வீதியில் தாவிச் சென்ற படங்கள் அண்மையில் சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் வெளியாகி பரவலாகப் பேசப்பட்டது.

சாதாரண வீதியில் வடிகாலமைப்பை முறையாகச் செய்ய முடியாதவர்கள் மலையகத்தில் வீடுகளையும் மக்களையும் பாதுகாப்பார்களா என்ற கேள்வியை அப்போது பலர் முன்வைத்திருந்தார்கள்.

நாட்டில் மாறி மாறி வரும் அரசாங்கங்கள் மலையக மக்களை நேசிப்பதாக பாசாங்கு காட்டினாலும், அக்கறையுடனும் இதய சுத்தியுடனும் காத்திரமான எந்த வேலைத்திட்டத்தையும் முன்னெடுத்ததில்லை.

மலையகப் பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவடைந்தமை தொடர்பில் கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், இத்தனை பழைய வீடுகளில் இன்னும் வாழ்ந்துகொண்டு பல தலைமுறைகளில் அன்பானவர்களை இயற்கைக்கு பலிகொடுத்துள்ள கசப்பான வரலாறு இந்த மக்களுக்கு உண்டு.

ஓர் இறப்பை சாதாரண செய்தியாக கடந்துவிட்டுப் போகமுடியாது. மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளின், அரச அதிகாரிகளின் கவனயீனத்தால் ஓர் உயிர் இழக்கப்படுமாயின் அதற்கு அவர்கள் பொறுப்புக் கூற வேண்டுமல்லவா?

3 ஆயிரம் வீடுகள் ஆபத்தில் உள்ளதாக ஏற்கனவே தெரிவித்துவிட்டோம் என மலையகத்தின் முக்கியமான தொழிற்சங்கம் இந்த விடயத்திலிருந்து நழுவிவிட முடியாது.

இவ்வாறு ஆபத்தான இடங்களை அடையாளம் கண்டு, அங்குள்ளவர்களுக்கு மாற்றுக் காணிகள் எங்கு வழங்க முடியும் என்பதையும் அதற்குரிய விபரங்களையும் திரட்டி சர்வதேச நிறுவனங்களின் ஊடாகவேனும் வீடுகளை அமைக்கலாம் அல்லவா?

ஒருபுறம் நிர்வாகக் கெடுபிடிகள், தீர்மானிக்கப்பட்ட வகையில் ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்கப்பெறாமை ஆகியவற்றால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அந்த நெருக்கடி நீளும் நிலையில் இவ்வாறு இடம்பெறும் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட வேண்டியது அவசியமாகும்.

மலையகத்திலுள்ள தொழிற்சங்கங்கள் ஒன்றிணைவது குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. மலையக தொழிற்சங்க நடவடிக்கை குழுவொன்று அவசியம் என்பதை ஜீவன் தொண்டமான் எம்.பி. சபையில் வலியுறுத்தியிருந்தார்.

மலையக பெருந்தோட்ட தொழிற்சங்க சம்மேளனம் உருவாக்கப்பட வேண்டுமென தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. 'தமிழன்' வார இதழுக்கு தெரிவித்திருந்தார்.

இவ்வாறான கலந்துரையாடல்கள் வரவேற்கப்பட வேண்டிய அதேநேரம் மலையக மக்கள் எதிர்நோக்கும் சம்பளப் பிரச்சினையை மாத்திரம் மையப்படுத்தாமல் பொதுவான சவால்கள் குறித்தும் ஆராயப்பட வேண்டும்.

சம்பளத்தை பெற்றுக்கொடுத்துவிட்டால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிடும் என்ற கடந்தகால எண்ணவோட்டங்கள் தவிர்க்கப்பட்டு சீரற்ற காலநிலையால் பாதிக்கப்படும் மக்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்பட வேண்டியது அவசியம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.




# அமைச்சரவை முடிவுகள்

## 2022.10.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01. உணவுக் கொள்கைக் குழுவை நிறுவுதல்**

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் போசாக்கினை உறுதிப்படுத்தல் போன்ற தீர்மானங்களை எட்டும்போது கிராமிய மட்டத்திலிருந்து மேல்மட்டத்தை நோக்கிய மூலோபாயத்தை பின்பற்றி கிராமிய பொருளாதார மறுமலர்ச்சி நிலையங்களை வலுப்படுத்தும் நோக்கில் பல்துறைசார் பொறிமுறையொன்று அரசாங்கத்தால் அண்மையில் நிறுவப்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகம் செய்தல் உள்ளிட்ட ஒட்டுமொத்த பொறிமுறைக்கு வழிகாட்டல் மற்றும் கண்காணித்தல், அத்துடன் பல்வேறு நிர்வாக மட்டங்களில் சமூகத்தில் அதிக இடருக்கு உள்ளாகக் கூடியவர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இயலுமை குறித்த பொறிமுறை மூலம் உறுதிப்படுத்தப்படும்.

இப்பொறிமுறையை முறைசார்ந்த வகையிலும் வினைத்திறனாகவும் நடைமுறைப்படுத்துவதற்காக விநியோகம், விலை மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான குறுகியகால பிரச்சினைகள் உள்ளிட்ட நாட்டில் விநியோகச் சங்கிலி நடவடிக்கைகள் தொடர்பாக உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோருக்கிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் நீண்டகால வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் குறித்த நிறுவனங்களின் தலைமையில் ஏற்புடைய நிறுவனங்களின் தலைவர்களின் பங்கேற்புடன் உணவுக் கொள்கைக் குழுவை நிறுவுவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளில் பணிபுரியும் ஊழியர்களின் ஓய்வு வயதை திருத்தம் செய்தல்**

நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ள 2022 இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ளவாறு, அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளில் பணிபுரியும் ஊழியர்களின் கட்டாய ஓய்வு பெறும் வயது 60 ஆக திருத்தப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, 2023.01.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அதற்கான ஒழுங்குவிதிகளை விதித்து ஏற்புடைய சுற்றறிக்கை ஆலோசனைகளை வெளியிடுவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தெசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. 2022/23 பெரும்போகச் செய்கைக்குத் தேவையான மியூரேட் ஒஃப் பொடாஸ் (MOP) உரக் கொள்வனவுக்கான பெறுகை**

ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டுள்ள 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைப் பயன்படுத்தி 40,000 மெட்ரிக்தொன் 2022/23 பெரும்போகச் செய்கைக்குத் தேவையான மியூரேட் ஒஃப் பொடாஸ் (MOP) உரக் கொள்வனவுக்கான பெறுகைக் கோரலுக்கு 2022.06.20 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, முறையான பெறுகைக் கோரல் செயன்முறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த ஒப்பந்தத்தை Ameropa Asia Pte, Ltd கம்பனிக்கு வழங்குவதற்காக நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் 2006 ஆம் 01 ஆம் இலக்க அரசாங்க அரசிறையைப் பாதுகாத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை திருத்தம் செய்தல்**

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 47 மற்றும் 57 ஆம் உறுப்புரைகள் மற்றும் 2006 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அரசாங்க அரசிறையைப் பாதுகாத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆவது உறுப்புரையைத் திருத்தம் செய்வதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அத்துடன் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகளால் பொருட்களை அரசுடமையாக்கல் மற்றும் அபராதம் விதித்தல் போன்றவற்றால் அரசுக்கு கிடைக்கின்ற வருமானம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால் குறித்த உறுப்புரையை திருத்தம் செய்வதன் அவசியத்தை அரசாங்க கணக்குகள் பற்றிய நாடாளுமன்ற குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதேபோல் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்தும் படிமுறையாக சுங்க நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை செய்தல் மற்றும் குறித்த விசாரணைகளைப் பூர்த்தி செய்வதற்கான கால வரையறையை சட்டரீதியாகக் குறித்தொதுக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, பொருத்தமான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தி மேலும் சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் 2006 ஆம் 01 ஆம் இலக்க அரசாங்க அரசிறையைப் பாதுகாத்தல் சட்டத்தை திருத்தம் செய்வதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. பாடசாலை பகலுணவு வேலைத்திட்டம்**

அரசாங்கம் வருடாந்தம் 4 பில்லியன் ரூபாவை செலவிட்டு 7,926 பாடசாலைகளில் 1.08 மில்லியன் மாணவர்களை இலக்குவைத்து பாடசாலை பகலுணவு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வறுமையொழிப்பு கொள்கைப் பிரகடனத்தின் கீழ் உணவுப் பற்றாக்குறையால் எந்தவொரு பிரஜையும் பட்டினியால் இருத்தல் ஆகாது எனும் நோக்கத்தை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டங்களை அரசாங்கம் துரிதமாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றது.

அதன்கீழ் வறுமை மற்றும் போசாக்கு தொடர்பாக மாவட்ட மட்டத்தில் காணப்படுகின்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, தேவையான நிதியை வெளிநாட்டு நன்கொடைகள் மூலம் பெற்றுக்கொண்டு தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பாடசாலை பகலுணவு வேலைத்திட்டத்தை விரிவாக்கம் செய்து மேலும் ஒரு மில்லியன் மாணவர்களுக்கு முழுமையான போசாக்கான பகலுணவு வேளையை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


**06. 2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

2023 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை தயாரிப்பதற்காக 2022.08.22 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒவ்வொரு செலவுத் தலைப்புக்களுக்கான வரவு-செலவுத்திட்ட மதிப்பீடுகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் அமைச்சரவையால் ஆராயப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான மொத்த மீண்டெழும் செலவாக 4,634 பில்லியன் ரூபாவும், மொத்த மூலதனச் செலவாக 3,245 பில்லியன்களும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, 2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தெசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவைத் தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)

# வீடு கட்டும் ட்ரோன்கள்!



தற்போது கட்டடம் கட்ட முப்பரிமாண அச்சு இயந்திரத்தை பயன்படுத்துகின்றனர். அவை கட்டடம் கட்டுவதை படம் பிடிக்க ட்ரோன் கேமராக்கள் பயன்படுகின்றன.

ஏன் இந்த இரண்டையும் இணைக்கக்கூடாது என்று சிந்தித்தனர் பிரிட்ட னிலுள்ள லண்டன் கல்லூரி மற்றும் சுவிட்சர்லாந்திலுள்ள எம்பா இன்ஸ்டி டியூட் ஆகியவற்றின் விஞ்ஞானிகள். உடனே பிறந்தது, ஏரியல் அடிடிவ் மெனு பேக்சரிங் எனப்படும், வான் கூட்டு உற்பத்தி இயந்திரம். ஆம்... இந்த இயந்திரம் ஒரு ட்ரோனுடன் காரைக் கலவைக் குழாயை பொருத்தி, அதை முன்னும் பின்னும் பறக்கவிட்டு கட்டடத்தை கட்டுகிறது.

இந்த ட்ரோனுக்கு கட்டுமான ட்ரோன் என்று பெயர். இது எப்படி கட்டுகிறது என்பதை அருகில் பறந்தபடி பார்த்து வழிகாட்டும் மேஸ்திரி ட்ரோன் ஒன்றையும் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இந்த ஸ்கேன் ட்ரோன் புளூ பிரிண்டிலிருந்து கட்டுமானம் மாறினால், உடனே கட்டுமான ட்ரோனுக்கு தகவல்களைப் பரிமாறி திருத்துகிறது.

கிரேன்கள், கம்பி தாங்கிகளை வைத்துக் கட்டுவதை தவிர்க்க பறக்கும் ட்ரோன்கள் உதவும். குழவியும் பறவைகளும் இவ்வாறு பறந்துதான், தங்கள் கூடுகளைத் தாமே அமைத்துக் கொள்கின்றன.

# கின்னஸ் சாதனை படைத்த ரோபோ



இரண்டு கால் ரோபோக்களுக்கு விரைவில் வீட்டிலும், தொழிற்சாலைகளிலும், டெலிவரி சேவைகளிலும் நல்ல மவுசு வரப்போகிறது. அப்படித்தான் சொல்கின்றனர் அமெரிக்காவிலுள்ள அஜிலிட்டி ரோபோடிக்ஸ் நிறுவனத்தார்.

அவர்கள் தயாரித்துள்ள ரோபோவான கேஸி, இடுப்புவரை மட்டுமே உள்ளது. இருந்தாலும், இரண்டு கால்களை வைத்து அது நடக்கும் நடையை நாள் முழுதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். அதன் கால்களின் வடிவமைப்பையும், மென்பொருளையும் மெருகேற்றி, 100 மீற்றர் பந்தயத்தில் ஓடவிட்டனர்.

அதில்தான் கேஸி, 24.73 வினாடிகளில் ஓடி சாதித்து, கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறது. மனித வீரர்கள், 100 மீற்றரை 10 வினாடிகளுக்குள் ஓடுவர். இந்த நிலையில், ஒரு ரோபோ 24 வினாடிகள் எடுத்தால் அது மெதுவானதாக ஆகாதா என்ற கேள்வி எழலாம். எனினும், அடுத்தடுத்த ஆண்டுகளில் கேஸி ரோபோவின் ஓட்டத்திறன் அதிகரித்து, மனிதர்களை விட வேகமாக கேஸியால் ஓட முடியும் என்கின்றனர் இதன் படைப்பாளிகள்.

# நக்கல் நமசிவாயம்

**60 வயதில் அரசாங்கப் பணியாளர் ஓய்வு பெறோணும் எண்ட தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுறாங்களாம்..! தானும் வீட்டுக்குப் போகவேண்டி வருமென ரணில் பயந்திட்டாரோ..?**



# இன்றைய நாளில்...

- ★ 1795 – இலங்கையின் மன்னார்ப் பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றினர்.
- ★ 1799 – ஆங்கிலேயரினால் பிடிக்கப்பட்ட கட்டபொம்மன் கயத்தாறு கொண்டுவரப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.
- ★ 1905 – ரைட் சகோதரர்கள் 24 மைல்களை 39 நிமிடங்களில் விமானத்தில் பறந்து சாதனை படைத்தனர்.
- ★ 1970 – அமெரிக்காவில் பொது ஒளிபரப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- ★ 1978 – ஈழத்தமிழர்களின் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் அவையின் கவனத்தில் கொண்டு வந்து தமிழீழ தேசத்தினைத் தனிநாடாக அங்கீகரிக்குமாறு கிருஷ்ணா வைகுந்தவாசன் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றினார்.
- ★ 1987 – விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 பேர் இந்தியப் படையின் காவலில் இருக்கும்போது நஞ்சருந்தி மரணமானார்கள்.

**ශ්‍රී ලංකා මහ බැංකුව இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA**

**04.10.2022 நாணய மாற்று வீதம்**

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 120 3873 | 131 3342 |
| கனேடியன் டொலர் | 150 3870 | 162 1308 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38 5113 | 41 4850 |
| யூரோ | 24 4281 | 254 1518 |
| ஜப்பான் யென் | 1 3530 | 1 4545 |
| சிங்கப்பூர் டொலர் | 138,0313 | 148 7731 |
| ஸ்ரேலிங் பவுன் | 3 2 8467 | 308 4726 |
| சுவிஸ் பிராங்க் | 247 2365 | 264 4043 |
| ஐ.அ.டொலர் | 248 0507 | 258 80 2 |


| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 851 4501 |
| குவைட் | குவைட் தினார் | 0,060 4411 |
| ஓமான் | ஓமான் றியால் | 831 4741 |
| கட்டார் | கட்டார் றியால் | 88,5388 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4305 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 6883 |

# சட்டவிரோத பண்ணைகளினால் எங்களின் தொழிலுக்கு இடையூறு

**பாதிக்கப்பட்ட பூநகரி பிரதேச கிராஞ்சி சிவபுர மீனவர்கள் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு**







**(மன்னார் நகர் நிருபர்)**

பாதிக்கப்பட்ட பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராஞ்சி சிவபுர மீனவர்கள் நேற்று (4) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராஞ்சி சிவபுர மீனவ சமூகங்கள் தாங்கள் கடந்த பல நாட்களாக சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட கடல் அட்டை பண்ணைகளால் சிறு மீன்பிடி கரையோர தொழிலாளர்கள் தமது பாரம்பரிய மீன்பிடித் தொழிலை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது இருப்பதாக தெரிவித்து கடந்த 4 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், தமது தொழிலுக்கு இடையூறாக தமது கடல் கரையோரம் முழுவதும் சட்டவிரோதமாக பண்ணைகள் அமைக்கப் பட்டுள்ளதாகவும் இவற்றை அரச அதிகாரிகள், பொறுப்புவாய்ந்த திணைக்களங்கள் எந்தவித அக்கறையும் கொள்ளவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் சிலர் நேற்று யாழ். மாவட்ட பிராந்திய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளனர்.

தொடர்ச்சியாக போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற நிலையில், அதிகாரிகள் எவரும் தமது இடத்திற்கு வந்து உரிய தீர்வை பெற்றுத் தர முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என பாதிக்கப் பட்ட மீனவ குடும்பங்கள் கவலை தெரிவித்துள் ளனர். கிராஞ்சி இலவன்குடா கடற்பகுதியில் கடலட்டைப் பண்ணை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இலவன்குடா கடற்பரப்பில் பெண் தலைமைத் துவ குடும்பங்கள் உட்பட கடற்றொழிலாளர்கள் சிறகு வலை தொழிலினூடாக இறால், நண்டு, மீன் போன்றவற்றை பிடிப்பதை அன்றாட வாழ்வாதார தொழிலாக பல ஆண்டுகளாக செய்து வருகின்றனர்.

இந்நிலையில், அவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் தற்போது கடலட்டைப் பண்ணைகள் அமைக்கும் முயற்சிகள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனைத் தொடர்ந்து கடற்றொழிலாளர்கள் குறித்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் சாதகமான முடிவை சம்பந்தப்பட்டவர்கள் வழங்கும் வரை தாம் போராட்டத்தை கைவிடப்போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், மனிதாபிமான பணியில் ஈடுபட்டு வருகின்ற மன்னார் மாவட்ட சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பிரதிநிதிகள் அண்மையில் குறித்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர் களை நேரடியாக சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் பணியாளர்களும் கலந்துகொண்டிருந்தனர். குறித்த மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து குழுவினர் கேட்டறிந்தனர்.

தமக்காக ஓர் அமைப்பு ஆதரவு வழங்கி வருகின்ற நிலையில், தமது உரிமைகளை வென்றெடுக்க உணவு தவிர்ப்புப் போராட்டத்தை கைவிட்டு தமது போராட்ட வடிவை மாற்றி சுழற்சி முறையில் போராட்டத்தை மேற்கொள்ள தீர்மானித்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தை கைவிட்டனர்.

5ஆவது நாளாகவும் நேற்று தமது போராட்டத்தை குறித்த மீனவர்கள் முன்னெடுத்து வருகின்ற நிலையில், மீனவர்களின் பிரதிநிதிகள் சார்பாக ஒரு குழுவினர் நேற்று (4) காலை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு வருகை தருவதற்கு பங்களாதேஷ் பயணிகள் ஆர்வம்





டாக்காவிலுள்ள சர்வதேச மாநாட்டு நகரமான பசுந்தராவில் கடந்த செப்டெம்பர் மாதம் 29 - 30 மற்றும் ஒக்டோபர் 01ஆம் திகதிகளில் நடைபெற்ற 9ஆவது ஆசிய சுற்றுலாக் கண்காட்சியில் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸுடன் இணைந்து பங்களாதேஷிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் பங்கேற்றது. பங்களா தேஷின் சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலா அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் பங்களாதேஷ் பர்ஜதன் கூட்டுத்தாபனம், பங்களாதேஷ் சுற்றுலா சபை மற்றும் சுற்றுலா இதழான பர்ஜதன் பிசித்ரா ஆகியவற்றின் கூட்டு ஒத்துழைப்புடன் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த மூன்று நாள் சுற்றுலாக் கண்காட்சியின் போது, ஆயிரத்திற்கும் மேற்பட்ட பங்களாதேஷ் சுற்றுலா செயற்படுத்துனர்கள், பயண முகவர்கள், தனிப்பட்ட பயணிகள் மற்றும் மாணவர்கள் இலங்கை விளம்பரச் சாவடியை பார்வையிட்டனர். பிராந்தியத்தில் பல நாடுகள் எதிர்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட பயணக்கட்டுப்பாடுகளின் இரண்டு வருடங்களின் பின்னர் பார்வையாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

ஒக்டோபர் 29ஆம் திகதி ஆரம்பத்தில் இலங்கை நடன நிகழ்ச்சிகளின் சிறப்புக் கலாசார மாலை வைபவத்துக்கு உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்தது. பங்களாதேஷிலுள்ள இலங்கை நடனப் பாடசாலை மாணவியொருவர் பாரம்பரிய நடனங்களை நிகழ்த்தினார்.

பங்களாதேஷ் சுற்றுலாப் பயணிகளுக்காக இலங்கைக்கான விசேட விமானக் கட்டணத்தை ஊக்குவித்துவரும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், மூன்று நாள் கண்காட்சியின்போது ஒவ்வொரு நாளும் மாலைவேளையில் நடத்தப்பட்ட போட்டியின் அதிர்ஷ்ட வெற்றியாளர்களுக்கு கொழும்பு சென்று திரும்புவதற்கான மூன்று விமான ரிக்கெட்டுகளை வழங்கியது.

கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் பயணம் மற்றும் கூட்டங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக பிற்போடப் பட்டிருந்த ஆசிய சுற்றுலாக் கண்காட்சி 2022, இரண்டு வருட இடைவெளிக்குப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டது.

# கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்திய 65ஆவது நாள் போராட்டம் மடு குஞ்சுக்குளத்தில்





**(மன்னார் நகர் நிருபர்)**

வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 65ஆவது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு நேற்று (4) மன்னார் மாவட்ட மடு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குஞ்சுக்குளம் கிராமத்தில் இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட் டத்தில் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர் பங்குபற்றியதோடு, குஞ்சுக்குளம், பெரிய முறப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கிராம மக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர் கள், விவசாயிகள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது குஞ்சுக்குளம் கிராம மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் முன்வைத்தனர்.

இளைஞர்கள், பொதுமக்கள், சிவில் அமைப்பு கள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தர மான அரசியல் உரிமை வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் தொனிப் பொருளில் வடக்கு, கிழக்கிலுள்ள 8 மாவட்டங் களில் 100 நாட்கள் நடைபெறவுள்ள செயல் திட்டத்தின் 65ஆவது நாள் கவனயீர்ப்புப் போராட் டம் வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மேற்படி மடுகுஞ்சுக்குளம் பகுதியில் இடம்பெற்றது.

குறித்த போராட்டம் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





*கம்பளை நகரில் ராஜசிங்க மாவத்தையில் அமைந்துள்ள செய்ஹ் சம்ஸ் அல் பாஸி ஸாவியாவில் வருடாந்தம் நடைபெற்றுவரும் சாதுலிய்யா மனாகிப் தமாம் வைபவம் அண்மையில் நடைபெற்றது. மாத்தறை மின்னதுல் பாஸியா அரபுக் கல்லூரி முதல்வர் உஸ்தாத் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம்.இஸ்திகார் ஆலிம் (பாரி) முஸாக்கரா நிகழ்த்தினார். (படங்கள்: பேருவளை நிருபர்)*





*சகல மாணவர்களுக்கும் சிறந்ததொரு எதிர்காலம் எனும் நிகழ்வு கல்முனை கிமு/அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் (03) இடம்பெற்றது. பாடசாலை அதிபர் எம.எச்.எஸ்.ஆர்.மஜீதியா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீமும் கலந்துகொண்டார்.*

# றொக்கில் ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தான பாலஸ்தாபன சாந்திப்பெருவிழா அடுத்த மாதம்

(பதுளை நிருபர்)

பதுளை, றொக்கில் அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தான பாலஸ் தாபன சாந்திப்பெருவிழா அடுத்த மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பாலஸ்தாபன சாந்திப்பெருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 11ஆம் திகதி காலை 7 மணிக்கு விநாயக வழிபாடு, அனுட்ஞை, கணபதி, இலட்சுமி நவக்கிரக ஹோமங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று புண்ணியாவாஜனம், கடகஸ்தாபனம் யாக பூஜைகள் ஆகியன நடைபெறும்.

அன்றைய தினம் யாக பூஜைகள், விசேட திரவிய ஹோமம், மஹாகணபதி பூஜைகள், பூர்ணாகுதி ஆகியனவும் இடம்பெறும்.

அடுத்த மாதம் 11ஆம் திகதி மஹாகணபதி பூஜை, யாகபூஜைகள் இடம்பெற்று காலை 9.15 மணிமுதல் 10.30 மணிக்குள் வரும் சுபவேளையில் பாலஸ்தாபன சாந்திப்பெருவிழா இடம்பெறும்.


**பகிரங்க ஏல விற்பனை**

எமது சேவை மையங்களில் அடகுவைக்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்தும், மீட்கப்படாத தங்க நகைகள் 2022 ஒக்டொபர் மாதம் 08 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை எமது நகர காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

COMMERCIAL CREDIT

முகாமையாளர்
கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி
நகர காரியாலயம்
இல. 165, கின்சி வீதி
கொழும்பு 08



**பகிரங்க ஏலவிற்பனை**

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2022 அக்டோபர் மாதம் 26 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது

தங்க கடன் பிரிவு
வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்



திகதி 03.10.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4897
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,065,470.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 4 6 8 2 4 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,153,324.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3139
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,242,160.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 13 31 46 47
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,196,275.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1352
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,739,260.00
வெற்றி இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 5 6 0 5 5 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,375,072.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 927
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,310,940.00
வெற்றி இலக்கினம் K வெற்றி இலக்கங்கள் 04 07 20 41
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 128,332,072.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 206
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,250,640.00
இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 33 44 53 56 விசேட இலக்கினம் மீனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,775,751.20

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1245
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,994,540.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 273,630,070.00
T 02 24 46 64 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email: info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web: www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## வீட்டு முன்றலில் கஞ்சாத் தோட்டம்; எல்ல பொலிஸார் சுற்றிவளைப்பு



(பசறை நிருபர்)

பண்டாரவளை - எல்ல பகுதியில் வீடொன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் வளர்க்கப்பட்ட கஞ்சா செடிகள் பொலிஸ் சுற்றிவளைப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எல்ல பகுதியில் நேற்று (04) விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின் போதே மேற்படி கஞ்சா பயிர்ச்செய்கை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், 41 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



ஹப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்ற வாணி விழா நிகழ்வுகளின்போது... (பதுளை நிருபர்)

## மலைநாட்டில் தொடரும் கடும் மழையுடனான காலநிலை

# காசல்ரீ - விமலசுரேந்திர நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிப்பு; வான் கதவுகள் திறப்பு

### அண்டிய பகுதிகளில் வசிப்போர் அவதானத்துடன் இருக்குமாறு எச்சரிக்கை





(க.கிஷாந்தன் - எம்.கிருஸ்ணா)

மத்திய மலைநாட்டில் பெய்துவரும் கடும் மழையால் காசல்ரீ மற்றும் விமலசுரேந்திர உள்ளிட்ட பல்வேறு நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்துள்ளதுடன், அவற்றின் வான் கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன. இதனால் நீர்த்தேக்கங்களை அண்டிய பகுதியிலுள்ளவர்கள் அவதானத்துடன் இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், கடும் மழை காரணமாக மவுஸ்ஸாக்கலை, லக்ஷபான, கெனியன், கொத்மலை, மேல் கொத்மலை மற்றும் நவ லக்ஷபான உள்ளிட்ட பல்வேறு நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

**காசல்ரீ நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள்**

களனி ஆற்றின் பிரதான கிளையாறான கெசல்கமுவ ஓயாவில் அமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது நீர் மின் நீர்த்தேக்கமான காசல்ரீ நீர்த்தேக்கம் அதன் முழு கொள்ளளவையும் எட்டியுள்ள நிலையில், அதன் தானியங்கி வான் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேறி வருகின்றது.

இந்த தானியங்கி வான் கதவுகள் வழியாக நேற்று (04) காலை முதல் நீர் வெளியேறி வருகின்றது.

இந்த நீரானது களனி ஆற்றின் நீர்மட்டத்தை வெகுவாக அதிகரிக்கும் என்பதால், காசல்ரீ நீர்த்தேக்கத்தின் கீழ்ப் பகுதியில் களனி ஆற்றின் கரையில் குடியிருப்பவர்களும், இந்த ஆற்றைப் பயன்படுத்துபவர்களும் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என நீர்த்தேக்கத்தின் கடமை நேரப் பொறியியலாளர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் இந்தப் பிரதேசத்தில் கடும் மழைப்பெய்து வருவதால் காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு அதிகளவான நீர் விநியோகிக்கப்படுவதால் இந்த தானியங்கி வான் கதவுகள் அவ்வப்போது திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறப்பு**

இதேபோன்று நோட்டன் பிரிட்ஜ் விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது. இதனால் குறித்த நீர்த்தேக்கத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன என மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர். அத்தோடு நீர்த்தேக்க கரையோர பிரதேசத்தில் நடமாடுபவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## உக்குவளையில் இலவச மரக்கன்று - பசளை வழங்கும் நிகழ்வு இன்று

(உக்குவளை நிருபர்)

உக்குவளை ரம்யலங்கா, உக்குவளை விவசாயத் திணைக்களம் மற்றும் பிரதேச சபை ஆகியன இணைந்து பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட நூறு பேருக்கு வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக மரக்கன்றுகளையும் அதற்கான 10 கிலோ சேதனப் பசளையையும் இலவசமாக வழங்கவுள்ளன.

இந்நிகழ்வு இன்று (5ஆம் திகதி) காலை 9.00 மணிக்கு உக்குவளை அல்-ஹிக்மா பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ளதுடன், இதன்போது உக்குவளை விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த கான் என்பவரால் வீட்டுத்தோட்டத்தின் அவசியம் குறித்தும் சேதனப்பசளையிடல் குறித்தும் விளக்கமளிக்கப்படவுள்ளதாக உறுப்பினர் எம்.கலீல் தெரிவித்துள்ளார்.

## சென்.கூம்ஸ் மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு



(செ.திவாகரன்)

லிந்துலை, சென்.கூம்ஸ், மட்டுக்கலை, லெலன்தோமஸ் மற்றும் வோல்றிம் ஆகிய பெருந்தோட்டங்களை உள்ளடக்கி இயங்கிவரும் சென்.கூம்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை (03) பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் என்.தங்கராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா வலய கல்விப்பணிப்பாளர் லசந்த அபேரத்ன, கல்வி அபிவிருத்திப் பொறுப்பாளர் கணேஷ்ராஜ் மற்றும் மட்டுக்கலை சென்.கூம்ஸ் தோட்ட முகாமையாளர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், தோட்ட நிர்வாகிகள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலாசார, நடன நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், இம்முறை வெளியான உயர்தரப் பரீட்சையில் 100% பெறுபேறு பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த புலமைப்பரிசில், சாதாரணதரம் மற்றும் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றி சாதனை படைத்த 200இற்கும் மேற்பட்ட மாணவர்களை கௌரவித்து பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இதன்போது, "மாணவர்களின் ஆற்றல்களையும் திறமைகளையும் தேடியறிந்து அவற்றுக்கெல்லாம் ஊக்கமளிப்போம். அவர்களின் சாதனைகளுக்கு எப்போதும் உறுதுணையாக நாங்கள் இருப்போம்" என பாடசாலையின் அதிபர் என்.தங்கராஜ் தனதுரையில் தெரிவித்தார்.

## இலங்கை நாடார் நலன்புரி சங்கத்தால் புத்தகங்கள் வழங்கிவைப்பு



(தலவாக்கலை நிருபர்)

காமராஜரின் 47ஆவது நினைவு தினைத்தை முன்னிட்டு இலங்கை நாடார் நலன்புரி சங்கத்தினூடாக தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு ஒரு தொகை புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

பாடசாலையின் ஆசிரியை தேவரஞ்சனி ஊடாக இந்தப் புத்தகங்கள் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன. இதன்போது பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.



இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்கேல் ப்பிள்டன் யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவை நேற்று (04) செவ்வாய்க்கிழமை சந்தித்தார்.

## யாழில் போதைப்பொருளுடன் இரு பெண்கள் உட்பட மூவர் கைது

யாழ். குடாநாட்டில் உயிர்க்கொல்லி ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த இரு பெண்கள் உட்பட 3 பேர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மணியந்தோட்டத்தில் 5.5 கிராம் ஹெரோயினுடன் 36 வயதான பெண்ணும், 1.3 கிராம் போதைப்பொருளுடன் 42 வயதான அவருடைய கணவரும் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும், கொக்குவில் பகுதியில் 40 வயதான பெண் ஒருவர் 2.5 கிராம் ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ். பொலிஸ் நிலையப் பொலிஸாரினால் அதிரடியாகபல இடங்களில் நேற்று முன்தினம் திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. போதைப்பொருள் வியாபாரிகளை இலக்குவைத்து இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போதே ஒரு நாளில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் மன்னாருக்கு விஜயம்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருந்த இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சரா ஹூல்ரன், நேற்று முன்தினம் (3) மாலை மன்னார் மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்து அரச அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெலுடன் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இக்கலந்துரையாடலின்போது மன்னார் மாவட்ட நிலைவரம் தொடர்பாக அரச அதிபரினால் விளக்கமளிக்கப்பட்டதுடன், அரசாங்கத்தால் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள், அபிவிருத்திப் பணிகள் மற்றும் மாவட்ட மக்களுக்குத் தேவைப்பாடாக உள்ள விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்தோடு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புதல், நிலையான வாழ்வாதார வழிவகைகள் மற்றும் கிராம மட்ட உட்கட்டமைப்பு விடயங்கள் உள்ளிட்ட மேலும் பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடியுள்ளதுடன், தூதுவரை கௌரவிக்கும் முகமாக மாவட்ட அரசாங்க அதிபரினால் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பிரதம உள்ளக கணக்காய்வாளர் மூவரும் கலந்துகொண்டிருந்தனர்.

# வவுனியா அல்-இக்பால் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற சிறுவர் தினம்



(வவுனியா நிருபர்)

வவுனியா, அல்-இக்பால் மகாவித்தியாலயத்தில் சிறுவர் தினம் நேற்று முன்தினம் (03) சிறப்பாக இடம்பெற்றது.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை அதிபர் ஏ.கே.உபைத் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது, சிறுவர் தினம் தொடர்பில் ஆசிரியர் சகாப்தீன் மற்றும் சிறுவர்களும் தற்போதைய போக்குகளும் தொடர்பில் வவுனியா தெற்கு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெசீம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

அத்துடன், மாணவர்களின் திறமையை மேம்படுத்தும் பொருட்டு பாடல், கயிறு இழுத்தல், பலூன் உடைத்தல், முட்டி உடைத்தல், பந்துப் பரிமாற்றம், குறிபார்த்து எறிதல், இசையும் அசைவும் உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், ஒவ்வொரு நிகழ்விலும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## யாழ். இந்துக்கல்லூரி சுற்றாடலில் போதைப்பொருளுடன் இளைஞன் கைது

யாழ். இந்துக்கல்லூரி சுற்றாடலில் போதைப்பொருளுடன் நடமாடிய இளைஞனொருவர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே குறித்த இளைஞன் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞனிடமிருந்து ஒரு தொகை போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட இளைஞன் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

## வட்டுக்கோட்டை திருவடிநிலை கடலில் ஆணொருவரின் சடலம் மீட்பு

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திருவடிநிலை கடலில் மிதந்த நிலையில் உள்ளவாறு ஆண்ணொருவரின் சடலம் நேற்று (04) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபரின் குறித்த சடலமானது மீனவர்களின் வலையில் சிக்கியவாறு காணப்படுகிறது.

அப்பகுதி மீனவர்கள் நேற்றுக் காலை கடற்றொழிலுக்கு சென்றவேளை சடலத்தினை அவதானித்தனர். அதன் பின்னர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டது.

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டும் அவர்கள் இன்னமும் சம்பவ இடத்திற்கு வருகைதரவில்லை என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

## காலில் குழவி விழுந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ். வரணி வடக்கைச் சேர்ந்த கிட்டினன் தங்கலிங்கம் (வயது 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 27ஆம் திகதி வீட்டு மேசையில் இருந்த அம்மிக் குழவி குறித்த நபரின் காலில் விழுந்துள்ளது. இதனைத் தொடர்ந்து கடந்த 2 நாட்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# போராட்டங்களால் அனைத்து திட்டங்களும் சீர்குலைந்துவிட்டன!

## நாட்டில் தற்போதுள்ள நிலைமைக்கு போராட்டக்காரர்களும் பொறுப்புடையவர்கள் என்கிறார் அமைச்சர் பிரசன்ன

வீடுகளை நிர்மாணிப்பதற்காக போராட வேண்டுமே தவிர, இருக்கும் வீடுகளை தீ வைத்து அழிப்பதற்காக போராட்டங்கள் முன்னெடுக்கப்படக் கூடாது. ஆனால், இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு போராட்டக்காரர்களும் பொறுப்புக் கூற வேண்டுமென நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும், மக்களை வாழவைப்பதற்காக போராட வேண்டும். மாறாக மக்கள் உயர்த்தியாகம் செய்வதற்காக போராடக்கூடாது. அதேபோன்று, நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதற்காக போராட வேண்டும்.

அதற்குப் பதிலாக போராட்டங்களால் நாடு முடங்கிவிடக் கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் (03) இடம்பெற்ற சர்வதேச வாழ்விட தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார் .

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற போராட்டங்களால் எமக்கு என்ன கிடைக்கப்பெற்றது? பல்வேறு சவால்களின் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட பொருளாதாரம் பின்னடைவை சந்தித்துள்ளது.

சர்வதேச மட்டத்தில் எமக்கு இருந்த வரவேற்பு இல்லாமல் போயுள்ளது. அரசாங்கம் என்ற அடிப்படையில் நாடு தொடர்பில் திட்டங்கள் இருந்தன. வருட முடிவில் நாடு எந்த நிலையில் இருக்க வேண்டும் என்ற விடயம் எங்களின் வேலைத்திட்டத்தில் இருந்தது.

கொரோனா நிலைமையினாலும் போராட்டங்களினாலும் அந்த வேலைத்திட்டங்கள் சீர்குலைந்துள்ளன.

இந்தப் போராட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்காவிட்டால் நாங்கள் சந்தித்திருந்த பொருளாதார நெருக்கடிக்கு அநேகமான தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



# பேராதனை பல்கலை மாணவனை காணவில்லை

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மூன்றாம் வருட மாணவன் ஒருவர் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (03) காலை முதல் குறித்த மாணவன் காணாமல் போயுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகத்தினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கணேமுல்ல பகுதியைச் சேர்ந்த 25 வயதான புலஸ்தி பிரமுதித் பெரேரா என்ற மாணவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்த குறித்த மாணவன் கடந்த 02ஆம் திகதியே இறுதியாகக் காணப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நாடாளுமன்றம் - கொழும்புப் பல்கலைக்கழகம் இணைந்து ஆரம்பித்த பாடநெறியின் முதற்கட்டம் நிறைவு



இலங்கை நாடாளுமன்றம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் என்பன இணைந்து வரலாற்றில் முதல் தடவையாக ஆரம்பித்த நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்த குறுகியகால பாடநெறியின் முதலாவது கட்டம் அண்மையில் பூர்த்தியடைந்தது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொதுக் கொள்கைகள் திணைக்களத்தின் இறுதியாண்டு பட்டதாரி மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பாடநெறியின் வளவாளர்களாக நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் மற்றும் நாடாளுமன்ற செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

இதற்கமைய கடந்த 16ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தில் இப்பாடநெறியின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றிருந்ததுடன், இதில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க முதலாவது விரிவுரையை நடத்தியிருந்தார்.

இதன் பின்னர் கடந்த 29ஆம் மற்றும் 30ஆம் திகதிகளில் நாடாளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே.ஜயதிலக மற்றும் சட்டவாக்கத் திணைக்களத்தின் பணிப்பாளரும், தொடர்பாடல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமான எச்.ஈ.ஜனகாந்த சில்வா ஆகியோர் விரிவுரைகளை நடத்தியிருந்தனர்.

ஜனநாயகம் மற்றும் நாடாளுமன்ற முறைமை பற்றிய கோட்பாட்டு அறிவின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட இந்தக் குறுகிய பாடநெறியானது பல்கலைக்கழக மாணவர்களுக்கு புதிய அனுபவத்துடன் கூடிய பெறுமதியான குறுகிய பாடநெறியாக அமைந்தது என பாடநெறி முடிவின்போது கருத்துத் தெரிவித்த கொழும்புப் பலைக்கழகத்தின் அரசியல் மற்றும் பொதுக் கொள்கைகள் திணைக்களத்தின் தலைவர் கலாநிதி பிரதீப் பீரிஸ் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் தம்மிக திசாநாயக்க ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

ஏனைய பல்கலைக்கழகங்களில் அரசியல் விஞ்ஞானம் கற்கும் மாணவர்களுக்கு இந்தக் குறுகிய பாடநெறியை வழங்குவதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இலங்கை நாடாளுமன்றம் பல்கலைக்கழகமொன்றுடன் இணைந்து இவ்வாறான கல்விப் பாடநெறியொன்றை ஆரம்பித்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

# மதுபோதையில் அநாகரிகமாக செயற்பட்ட சிப்பாய் கைது

**(மொணராகலை நிருபர்)**

புத்தல மாவட்ட வைத்தியசாலையில் மதுபோதையில் அநாகரிகமாக நடந்துகொண்ட இராணுவ சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் புத்தல பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தல குடாஓயா பிரதேசத்தைச் சேர்ந்த 16ஆவது கெமுனு ஹேவா படைப்பிரிவின், வெலன்கன்னி இராணுவ முகாமில் கடமையாற்றிவந்த 31 வயதுடைய சிப்பாய் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மருத்துவமனை அதிகாரிகளினால் புத்தல பொலிஸாருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமையவே சந்தேகநபர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

அநுராதபுரம், பிள்ளயார் சந்தி பகுதியில் இருநூறு கிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருளினை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர், அநுராதபுரம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக் கமைய நேற்று முன்தினம் (03) அநுராதபுரம் பிள்ளயார் சந்தி பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போதே, சந்தேகநபரை கைதுசெய்துள்ளதுடன் 201 கிராம் ஹெரோயின் போதைப்பொருளினை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் 43 வயதுடைய நிதஹஸ் மாவத்தை, அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்தவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்காக அநுராதபுரம் நீதிமன்றில் பெற்றுக்கொண்ட தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் பல கோணங்களிலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.










# இங்கிரிய விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கு சின்னம் அணிவிக்கும் விழா

களுத்துறை மாவட்டம், இங்கிரிய, றைகம், கீழ்ப்பிரிவு, விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில், 2022 ஆம் ஆண்டுக்கான மாணவத் தலைவர்களுக்கு சின்னம் அணிவிக்கும் விழா, அண்மையில் நடைபெற்றது.

விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம். ஆனந்தகுமாரின் தலைமை ஒருங்கமைப்பில் நடைபெற்ற இந்த சிறப்பு நிகழ்வில், பிரதம அதிதியாக மொரட்டுவை பார்ம்ஸ் லங்கா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பி.கிளாரன்ஸ், ஐ.மெண்டிஸ் கலந்து சிறப்பித்திருந்ததுடன், 25 மாணவர்களுக்கான மேலங்கிகளையும் வழங்கினார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் பாடசாலை மாணவர்களின் பேண்ட் வாத்தியக் குழுவினரின் அணிவகுப்பு மரியாதையுடன் பிரதம அதிதிகள் பாடசாலை மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டதுடன், பிரதம அதிதிகளின் மங்கள விளக்கேற்றும் வைபவமும் நடைபெற்று, கலாசார வரவேற்பு நடன நிகழ்ச்சிகளுடன், அதிதிகளின் சிறப்புரையுடன் மாணவத் தலைவர்களுக்கு சின்னம் அணிவித்து சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், ஹொரண வலய தமிழ்ப் பிரிவு தமிழ்க்கல்விப் பணிப்பாளர் எம்.சந்திரமோகன் மற்றும் ஹொரண வலயத்தில் அமைந்திருக்கும் தமிழ் பாடசாலைகளின் அதிபர்களான டீ.சி.ஜீவயோகினி, டி.யோகராஜா, ஆர்.லோரன்ஸ், எஸ்.பிரதாபன் மற்றும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அபிவிருத்தி சங்க செயலாளர் உள்ளிட்ட உறுப்பினர்களுடன் பெருந்திரளான மாணவர்களும் பெற்றோர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள்.

**(படங்களும் தகவலும்: மணி ஸ்ரீகாந்தன்)**













# ஆளுநரின் செயற்பாட்டால் கிழக்கில் பால் உற்பத்தி தொழில்துறை பாதிப்பு

## சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாண ஆளுநர் கிழக்கு மாகாணத்தை நாசப்படுத்தியுள்ளார். இவரது செயற்பாடுகள் கிழக்கு மாகாணத்தில் பால் உற்பத்தி தொழில்துறையை முழுமையாக பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்தவேண்டும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் விவசாயத்துறை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் (03) நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருசில பகுதிகள் மேய்ச்சல் நிலங்களென இதுவரை வர்த்தமானி வெளியிடப்படவில்லை.

வியத்மக அமைப்பின் உறுப்பினரான கிழக்கு மாகாண ஆளுநர் கிழக்கு மாகாணத்தை முழுமையாக நாசப்படுத்தியுள்ளார். இந்த



மேய்ச்சல் நில பிரச்சினை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் முறையாக செயற்படவில்லை.

நாட்டில் விவசாயத்துறை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், பால் உற்பத்தி தொழில்துறையும் வீழ்ச்சியடைந்து செல்கிறது. பால் உற்பத்தியாளர்கள் மேய்ச்சல் நிலம் இல்லாத காரணத்தினால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

மயிலாடுதுறை பகுதியில் அத்துமீறிய வகையில் ஒரு தரப்பினர் கூடாரமிட்டுள்ளார்கள். இச்செயற்பாடுகளுக்கு எதிராகவே நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தோம். இவர்களை மீண்டும் அழைத்து வருவதில்லையென பொறுப்பான தரப்பினர் குறிப்பிட்டதன் பின்னரே வழக்கை மீளப் பெற்றோம். தற்போது மீண்டும் வழக்கு தாக்கல் செய்ய நேரிடும் - என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர,

இவ்விடயம் தொடர்பில் மகாவலி அதிகார சபைக்கும், கிழக்கு மாகாண ஆளுநருக்கும் அறிவிக்கிறோம்.

இவ்விடயத்தில் உணர்வுபூர்வமாகவும், பிரச்சினையற்ற வகையிலும் தீர்வு காணுமாறு ஆளுநருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கிறோம். உத்தியோகபூர்வமான அறிவிப்பின் ஒரு பிரதியை எனக்கும் தாருங்கள். அதனை மாவட்ட செயலாளருக்கு வழங்க முடியும்.

சேதனப் பசளை உற்பத்தி என ஒதுக்கப்பட்ட 5 ஏக்கர் நிலப்பரப்பு அரசியல் தரப்பினரின் இணக்கமானவர்களுக்கு வழங்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இது குறித்து அவதானம் செலுத்துமாறு வலியுறுத்துகிறேன் - என்றார்.

# மட்டக்களப்பில் மாணவர்களுக்கான சைக்கிள் பாதை திறந்துவைப்பு






(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபையுடன் யுனிசெப் மற்றும் செரி நிறுவனங்கள் இணைந்து முன்னெடுக்கும் 'சிறுவர்நேய மாநகரம்' செயற்றிட்டத்தின் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கான சைக்கிள் பாதையை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் (03) நடைபெற்றது.

சிறுவர்களின் எதிர்கால உடல், உள மேம்பாட்டை கருத்திற்கொண்டு அவர்கள் மத்தியில் சைக்கிள் பாவனையை அதிகரிக்கும் வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இது தொடர்பான நிகழ்வு மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் கல்லடி மணிக்கூண்டு கோபுரத்தருகில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்களான து.மதன், சிவபாக்கியநாதன், சீனித்தம்பி ஜெயந்திரகுமார் மற்றும் மட்டக்களப்பு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கூஹரிகரராஜ், யுனிசெப் மற்றும் செரி நிறுவனங்களின் அதிகாரிகள், மாணவர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு, கல்லடி மணிக்கூண்டு கோபுரத்தருகில் ஆரம்பமான சைக்கிள் பவனி சைக்கிள் பயணத்திற்காக ஒதுக்கப்பட்ட வீதியின் பகுதி ஊடாக மட்டக்களப்பு வெபர் மைதானம் வரையில் வருகைதந்ததுடன், தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் மாணவர்களின் அதிகரித்துச் செல்லும் உடற்பருமனை கட்டுப்படுத்தல் உட்பட பல்வேறு நோக்கைக்கொண்டு இந்தத் திட்டத்தைமட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் இதன்போது தெரிவித்தார்.

# கிழக்கு மாகாண புதிய பிரதம செயலாளராக ரத்நாயக்க பதவியேற்பு

(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாண புதிய பிரதம செயலாளராக எஸ்.ரத்நாயக்க நேற்று முன்தினம் (03) திருகோணமலையிலுள்ள அலுவலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

முன்னர் பிரதம செயலாளராக கடமையாற்றிய துசித பி.வனிகசிங்க ஓய்வுபெற்ற பின்னர் இருந்த பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டார்.



ரத்நாயக்க பிரதம செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகவும் பணியாற்றினார்.

நிர்வாக சேவையில் 27 ஆண்டுகளாக பல்வேறு பதவிகளை வகித்த ரத்நாயக்க, கந்தகெட்டிய, ஹகுரன்கெத்த, மத்திய மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளர், விவசாய அமைச்சின் செயலாளர் மற்றும் அதே மாகாண பிரதம அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பெண்கள் தலைமை தாங்கும் 70 குடும்பங்களுக்கு ஊக்குவிப்பு நிதியுடன் வீட்டுத்தோட்ட விதைகள்

## இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தால் வழங்கிவைப்பு

(மட்டக்களப்பு நிருபர்)



காத்தான்குடி மற்றும் மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெண்கள் தலைமை தாங்கும் 70 குடும்பங்களுக்கு தலா 10 ஆயிர ரூபா ஊக்குவிப்பு நிதியும் வீட்டுத் தோட்ட விதைகளும் வழங்கப்பட்டுள்ளதாக ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனீஸா பிர்தௌஸ் தெரிவித்தார்.

மேற்படி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (03) இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய நிறைவேற்றுப் பணிப்பாளர் அனீஸா,

"ஐவெயார் நிறுவனம் காலத்துக்குக் காலம் இப்பிரதேசத்திலுள்ள நலிவுற்ற, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் தேவைகளை அறிந்து உதவிகளை வழங்கி வருகின்றது. அந்தவகையில் நாட்டின் பொருளாதார ஸ்திரத் தன்மை இன்மை காரணமாக பொருளாதார ரீதியில் நெருக்கடியைச் சந்தித்து ஜீவனோபாயத்திற்கு சிரமப்படும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உதவுவதற்காக இந்தத் திட்டம் அமுலாக்கப்படுகிறது.

பெண்களும் கர்ப்பிணித் தாய்மாரும் குழந்தைகளும் போசாக்கில்லாத நிலைமையை எதிர்கொள்கின்றனர். மந்தபோசணையுடைய குழந்தைகள் பிறக்கின்றன. இன்னுமின்னும் போசாக்கற்ற குழந்தைகள் பிறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அந்த அடிப்படையில் பெண்களின் ஆரோக்கியத்தை யும் அவர்களின் போசாக்குத் தேவையையும் நிவர்த்தி செய்யவேண்டிய பொறுப்பு நம் எல்லோருக்கும் உண்டு.

அதனாலேயே நஞ்சற்ற உணவு, சுய சார்புப் பொருளாதாரம் என்ற அடிப்படையில் இந்த வேலைத் திட்டத்தைத் தொடங்கியிருக்கின்றோம்.

உணவுப்பொதிகள் வழங்குவதில் தொடங்கிய நமது பணி இப்பொழுது சுயமாக, அவர்களாகவே உற்பத்திசெய்து தங்களது போசாக்கையும் பொருளாதாரத் தேவைகளையும் பூர்த்திசெய்கின்ற அளவுக்கு திட்டம் வகுத்துச் செயற்படுகின்றோம்.

ஆசிய மன்றத்தின் அனுசரணையுடன் இது அமுலாக்கப்டுகின்றது. ஆசிய மன்றம் இலங்கையில் 15 மாவட்டங்களைத் தெரிவுசெய்து வீட்டுத் தோட்டங்கள், சுய உணவுப் பயிர்ச்செய்கை உள்ளிட்ட விடயங்களில் பெண்களை வலுவூட்டுகின்ற திட்டங்களை அமுலாக்கி வருகின்றது.

காத்தான்குடியில் இடநெருக்கடி காரணமாக அவஸ்தைப்படும் நிலைமை இருந்தபோதிலும் நவீன சிந்தனையோட்டத்தில் இடநெருக்கடி உள்ள இடங்களிலும் விவசாயத்தை மேற்கொள்ளலாம் என்ற மாற்றுத்திட்டம் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனையே நாம் இங்கு தொடங்கவுள்ளோம்.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் 70 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும் பயிர் விதைகளும் வழங்கப்பட்டன. இவர்களுக்கு ஏற்கனவே, எவ்வாறு வீட்டுத் தோட்டச்செய்கை மேற்கொள்வது என்பது பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன" - என்றார்.

# நெஸ்டமோல்ட் அனுசரணையில் 47ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகள்




நெஸ்லே நெஸ்டமோல்ட் அனுசரணையில் 47ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் கம்பஹாவில் நடைபெறவுள்ளன.

இந்த விளையாட்டு விழாவானது நாடு முழுவதிலுமிருந்து 800இற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கான தளத்தையும், வெற்றியாளர்களுக்கு தேசிய மட்ட போட்டியாளர்கள் அணியில் இணைத்துகொள்ளப்பட பரிசீலிக்கப்படுவதற்கான வாய்ப்பையும் வழங்கும்.

ஒட்டுமொத்தமாக 31 நிகழ்வுகளை உள்ளடக்கியுள்ளதுடன், முக்கிய நிகழ்வான - தேசிய மரதன், சைக்கிளோட்டம் மற்றும் நடைப்போட்டி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.




விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# எழுவர் அடங்கிய தேசிய விளையாட்டு தெரிவுக்குழு நியமனம்



விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் ஏழு பேர் கொண்ட தேசிய விளையாட்டு தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவின் தலைவராக பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் செயலாளராக அர்ஜுன் ரிஷ்ய பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். விளையாட்டு அமைச்சரின் பிரதிநிதியாக பிரசன்னா சந்தித் நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய உறுப்பினர்களாக முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூரிய, சத்திரசிகிச்சை ஆலோசகர் வைத்தியர். மாயா குணசேகர, தேசிய ஒலிம்பிக் கமிட்டி செயலாளர் மற்றும் திலக்கா ஜினதாச ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# மன்னார் வொலிபோல் ப்ரீமியர் லீக் வைபவரீதியாக ஆரம்பம்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் வொலிபோல் விளையாட்டின் தரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் விதமாக மன்னார் மாவட்ட வொலிபோல் சம்மேளனம் மற்றும் மன்னார் வொலிபோல் லீக் இணைந்து நடத்தும் 2022 ஆண்டுக்கான மன்னார் ப்ரீமியர் லீக் சுற்றுப்போட்டியின் அறிமுக விழா மற்றும் அங்குரார்பண நிகழ்வு கடந்த வாரம் மன்னார் வொலிபோல் லீக்கின் ஏற்பாட்டில் மன்னார் கெஸ்ற் தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது

மன்னார் மாவட்டத்தில் முதல் முறையாக மாவட்ட ரீதியில் வெலிபோல் வீரர்களை உள்ளடக்கி 8 அணிகள் உருவாக்கப்பட்டு இம்மாதம் குறித்த போட்டிகள் இடம்பெறவுள்ளன. குறித்த போட்டிகளில் கலந்துகொள்ளும் அணி வீரர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வும்,அவர்களுக்கான சீருடைகளை அணியின் உரிமையாளர்களை அறிமுகப்படுத்தும் ஆரம்ப நிகழ்வும் மேற்படி வைபவரீதியாக ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்றது.

குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இராஜாங்க அமைச்சர்



காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் விநோனோதராதலிங்கம், மன்னார் பொது பொலிஸ் அத்தியட்சகர் நாகவத்த, மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயதிலக்க, மன்னார் வொலிபோல் லீக் உறுப்பினர்கள், மன்னார் வொலிபோல் சம்மேளன உறுப்பினர்கள், வொலிபோல் வீரர்கள், வொலிபோல் லீக் உரிமையாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தாய்லாந்தை வீழ்த்தி இரண்டாவது வெற்றியை சுவைத்த இலங்கை மகளிர் அணி



மகளிர் ஆசியக்கிண்ண இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் கடந்த சனிக்கிழமைமுதல் பங்களாதேஷில் நடைபெற்றுவரும் நிலையில், நேற்று தங்களது மூன்றாவது போட்டியில் தாய்லாந்து மகளிர் அணியை எதிர்கொண்ட இலங்கை மகளிர் அணி, 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலகு வெற்றிபெற்று தொடரில் இரண்டாவது வெற்றியை பதிவுசெய்தது.

முதல் ஆட்டத்தில் இந்திய மகளிர் அணியை எதிர்கொண்ட இலங்கை மகளிர் அணி தோல்வியைத் தழுவியது.

எனினும், அடுத்து ஐக்கிய அரபு இராச்சிய அணியை வீழ்த்திய இலங்கை அணி நேற்று தாய்லாந்து அணியை வீழ்த்தியது. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 156 ஓட்டங்களைக் குவித்தது.

157 என்ற இலக்கை துரத்தி களமிறங்கிய தாய்லாந்து மகளிர் அணி, 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 107 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது. இலங்கை மகளிர் அணி தங்களது அடுத்த போட்டியில் வரும் சனிக்கிழமை மலேசியாவை எதிர்கொள்கிறது.

# விமானத்தை தவறவிட்டதால் உலகக்கிண்ணத்தை இழந்த ஹெட்மயர்



அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியிலிருந்து அதிரடி துடுப்பாட்ட வீரர் ஷிம்ரோன் ஹெட்மயர் நீக்கப்பட்டுள்ளார். அவுஸ்திரேலியா நோக்கிய பயணத்தில் திட்டமிடப்பட்ட விமானத்தை தவறவிட்டதால் அவர் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியில் ஹெட்மையருக்குப் பதிலாக ஷமர் ப்ரூக்ஸை பெயரிட தெரிவுக்குழு முடிவு செய்தது. ஹெட்மயர், முதலில் ஒக்டோபர் 1ஆம் திகதி அவுஸ்திரேலியா பறக்க திட்டமிடப்பட்டார். ஆனால், தனிப்பட்ட காரணங்களால் அவரது விமானத்தை மாற்றியமைக்க விரும்பினார்.

திங்கட்கிழமை புறப்படும் விமானத்தில் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை அவரை முன்பதிவு செய்தது. பின்னர் ஹெட்மயர் கிரிக்கெட் இயக்குநரான ஜிம்மி ஆடம்ஸிடம் பயணம் செய்யப்போவதில்லை என்று கூறியதனாலேயே இந்த திடீர் மாற்றம் நிகழ்ந்துள்ளது.

# வாழைச்சேனையில் 4 வீடுகள் உடைத்துக் கொள்ளை; ஹெரோயினுடன் இளைஞரொருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள 4 வீடுகளை உடைத்து அங்கிருந்து 17 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச்சென்ற 23 வயதுடைய இளைஞன் ஒருவரை ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் (03) கைதுசெய்துள்ளதாகவும் திருடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள 4 வீடுகளில் பெறுமதியான பொருட்கள், தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில், நாவலடி பிரதேசத்தில் வீடொன்றை உடைத்து அங்கிருந்து ரைஸ்குக்கர் ஒன்றும், தங்க ஆபரணமும், பிறைந்துறைச்சேனை பிரதேசத்தில் தொலைக்காட்சிப்பெட்டி ஒன்று, ரைஸ்குக்கர், 20 ஆயிரம் ரூபா பணம், செம்மண்ணோடை பிரதேசத்தில் வீடு ஒன்றின் கதவை உடைத்து கேஸ் சிலிண்டர் ஒன்று, மணிக்கூடு, 20 ஆயிரம் ரூபா பணமும், நாவலடி பகுதியில் கையடக்கத் தொலைபேசி இரண்டு, 70 ஆயிரம் ரூபா பணமும் திருடிச்சென்ற நாவலடி பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயது இளைஞனை ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்துள்ளனர்.

திருடப்பட்ட பொருட்களை மீட்டுவருவதாக தெரிவித்த பொலிஸார், இதில் கைதுசெய்யப் பட்டவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# போதைப்பொருள் வியாபாரிகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லையென மாணவர்களால் போராட்டம்

## ஆலையடிவேம்பில் முன்னெடுப்பு







(பாறுக் ஷிஹான்)

போதைப்பொருள் விற்பனை செய்கின்றவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கைசம்பந்தப்பட்ட அதிகாரிகளால் எடுக்கப்படுவதில்லையென கண்டித்து, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சகல பாடசாலைகளிலும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் (03) இடம்பெற்றது.

இப்போராட்டத்தில் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், சமூக நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

சிறுவர் தினத்திற்கு இணையாக இடம்பெற்ற இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் போதைப்பொருளை இல்லாதொழிக்க வேண்டியும் அதை விநியோகம் செய்கின்றவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தி மாணவர்களும் பெற்றோர்களும் பல்வேறு வாசகங்களை ஏந்திய சுலோக அட்டைகளை தாங்கி நின்றனர்.

அத்தோடு கோஷங்களை எழுப்பியவாறும் பாடசாலைக்கு முன்பாக ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

கடந்த சில காலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றவர்கள் மாணவர்களை இலக்குவைத்து பாடசாலைகளில் போதைப்பொருளை விற்பனைசெய்வது கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றிலும் வழக்குகள்



தொடரப்பட்டன.

இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனிநபர் ஒருவர் பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்து ஆசிரியர்களை அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டு 15 ஆசிரியர்கள் இணைந்து கையொப்பமிட்டு அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

ஆனாலும் அவ்விடயம் தொடர்பில் உரிய நபர் கைதுசெய்யப்படாது உரிய நபரை பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு அழுத்தங்கள் ஆசிரியர்கள்மீது பிரயோகிக் கப்பட்டதாகவும் இதனை அடிப்படையாக வைத்து பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி ஆசிரியர்களிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இதனால் தங்களுக்கு பாதுகாப்பில்லை என்பதுடன், மாணவர்களும் உள ரீதியாக பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதனை அடிப்படையாக வைத்தே நேற்று முன்தினம் (03) ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் இக்கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், அவ்விடத்திற்குச் சென்ற ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் திருக்கோவில் வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் கீ.கமலமோகனதாசன் ஆகியோரிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இங்கு போதைப்பொருளுக்கு எதிரான வீதி நாடகமொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் இன்று சம்பந்தப்பட்ட நபர் அக்கரைப்பற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலய மாணவி பாத்திமா ஜஸ்னா தேசிய மட்டத்துக்குத் தெரிவு

## பேச்சுப் போட்டியில் மாகாணத்தில் முதலிடம்

(மருதமுனை, நற்பிட்டிமுனை நிருபர்கள்)

அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டியில் மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் பத்தாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவி பாத்திமா ஜஸ்னா வலீத் மாகாண மட்ட பேச்சுப் போட்டியில் முதலாம் இடம்பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) மட்டக்களப்பு சிசிலியா பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் மொழித் தினப் போட்டியின்போதே இவர் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.


இவர் கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறாம் ஆண்டுக்கான சமூக விஞ்ஞான வினாவிடைப் போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பொற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் மருதமுனையைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.வலீத் - அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறின்தாஜ் தம்பதிகளின் புதல்வியாவார்.



இம்மாணவி தேசிய மட்டத்திற்குத் தெரிவானதையிட்டு பாடசாலை அதிபர் ஐ.உபைதுல்லா மற்றும் பாடசாலை சமூகமும் பாராட்டையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

# போடியார் புலம்பல்!



***மீண்டும் கிடைத்த வாய்ப்பை தவறவிடாமல் தேசிய பேரவையில் இணையட்டாம் என்று வீண கட்சி அமைச்சர் டக்ளஸ் சொல்லிப்போட்டாரு எலுவா.?***

***உங்களுக்கு ஆரு ஆட்சியமைத்தாலும் அமைச்சராகிற வாய்ப்பு இருக்கும் மட்டும் எதயாவது கொடுக்கிற எலும்புக்கு குரைத்துத்தான் ஆகவேண்டும் எண்டதற்காக சும்மா தேசிய சபை அமைச்சு பலகாரமா சுடப்போறீங்க. ஒண்டுமே நடக்காது உனக்கு மட்டும் ஏதும் தேறும்!***

# பூர்வீகக் காணிகள் மற்றும் குளங்களைப் பாதுகாக்க இறக்காமம் பிரதேச சபையில் கலந்துரையாடல்



(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேசத்திலுள்ள பூர்வீக நிலங்கள் மற்றும் பாரம்பரிய வரலாற்று தொன்மைவாய்ந்த குளத்தின் கரையோரப் பகுதிகள் நீண்ட காலமாக மிக நுணுக்கமான முறையில் பல தரப்பினராலும் ஆக்கிரமிக்கப்பட்டு, கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் அரசியல்வாதிகளிடமும் அரச நிர்வாகத்தினரிடமும் பல்வேறு முறைப் பாடுகள் செய்யப்பட்டும் ஆக்கபூர்வமான எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை. இறக்காமம் நன்னீர் மீனவ சங்கம், இறக்காமம் கால்நடை பண்ணையாளர் சங்கம், விவசாயக்குழு என்பன இணைந்து மேற்படி ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிராக அம்பாறை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

எனவே, இது விடயம் தொடர்பாக சிவில் சமூக பிரதிநிதிகளை தெளிவூட்டல் அமர்வும் எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலும் இறக்காமம் 1-9 நன்னீர் மீனவ சங்கத்தின் தலைவர் என்.நிஸ்வி தலைமையில் இறக்காமம் பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ்.ஜமீல் காரியப்பர், உதவித் தவிசாளர் மௌலவி ஏ.எல்.நௌபர், முன்னாள் தவிசாளர் ஜே.கே.ரஹ்மான், பிரதேச சபை உறுப்பினர் எம்.எல்.முஸ்மி ஆகியோருடன் இணைந்து இறக்காமம் பிரதான பள்ளிவாசல் தலைவர்கள், பிரதேச ஜம்மியதுல் உலமா சபையினர், கால்நடை பண்ணையாளர் சங்க உறுப்பினர்கள், நன்னீர் மீனவ சங்க உறுப்பினர்கள், இளைஞர் கழக சம்மேளனம், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இறக்காமம் பிரதேசத்திலுள்ள பூர்வீக நிலங்கள் மற்றும் பாரம்பரிய வரலாற்று தொன்மை வாய்ந்த குளத்தின் கரையோரங்கள் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படுவதற்கான நடவடிக்கைகள் இக்கூட்டத்தின் பின்னர் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

# யானை தாக்கியதில் விவசாயி உயிரிழப்பு; மட்டு. கொக்கட்டிச்சோலையில் சம்பவம்

(கல்லடி, மண்டூர் நிருபர்கள்)

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள தாந்தாமலை பகுதியில் குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற விவசாயி ஒருவர் யானை தாக்கியதில் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் (03) இடம்பெற்றுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

மகிழடித்தீவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை சிவலிங்கம் (வயது-45) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனது வீட்டிலிருந்து சம்பவதினமான நேற்று முன்தினம் (03) காலை 7 மணிக்கு தாந்தாமலை பகுதியிலுள்ள அடைச்சல் களப்பகுதியில் மீன்பிடிப்பதற்காக சென்றுகொண்டிருந்தபோது வீதியின் குறுக்கே வந்த யானை அவரை தூக்கி வீசியதில் சம்பவ இடத்திலேயே அவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக் காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒலுவில் துறைமுகம் தேவையில்லையெனில் தென்கிழக்குப் பல்கலையுடன் இணைக்கலாம்



ஒலுவில் துறைமுகம் மறைந்த தலைவர் அஷ்ரப்பின் இலட்சியக் கனவுகளில் ஒன்று. அவர் ஒரு தூரநோக்கோடு அதனை நிறுவினார். அவரின் மறைவின் பின்னர் 22 ஆண்டுகள் கழித்து "துறைமுகம் தேவையில்லை, அதனை மூடவேண்டும்" என்ற கோஷம் தென்கிழக்கில் எழுகின்றது. காரணம், துறைமுகம் பெயரைத் தந்தது. ஒலுவிலை தேசிய ரீதியில் பிரபல்யப்படுத்தியது. ஆனால், அது எதிர்பாராத நேர்மறையான விளைவுகளை கடந்த இரு தசாப்தத்தில் தந்துகொண்டிருக்கின்றது.

துறைமுகத்துக்குரிய கடலாக ஒலுவில் இல்லை. ஒலுவில் துறைமுகம் எனும் பெயரில் காணிகளை இழந்தது. தனது வளமான கடற்கரையை இழந்தது. மீன்பிடியை இழந்து தவிக்கின்றது. உட்கட்டுமானங்கள் அடைவுகளாக இருந்தாலும், தலைவரின் மரணத்தின் பின் பொருளாதாரத்துக்கு வலுவூட்டும் சக்தியாக துறைமுகம் இல்லை. மாறாக, ஒலுவில் எனும் கிராமத்தை கடல் விழுங்கி, நிந்தவூர் - கல்முனை பிரதேச கடற்கரைகளையும் படிப்படியாக கடல் அரிப்பு காவுகொண்டு வருகின்றது. அஷ்ரப்பின் அரசியலுக்குப் பின் வந்தவர்கள் திட்டத்தைப் புரிந்துகொள்ளாமல், எதிர்மறை விளைவுகளை உணராமல் இருப்பது இந்த சமூகத்தைக் கடல் அரிப்பது போன்றதுதான். துறைமுகம் இன்று ஒரு 'துன்பியலாக' மாறியுள்ள நிலையில், கோடிக்கணக்கான பணம் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், அதனை வெறுமனே மூடிவிட்டு எதனை சாதிக்கப் போகின்றோம் என்ற கேள்வி எழுகின்றது.

துறைமுகம் பாலமுனைக்கு வளம் சேர்த்துள்ளது. கடல் அரிப்பின் தாக்கம் அங்கு குறைவு. கடல் அரிப்பின் வேகம் சுற்றுலா விடுதி மற்றும் பல்கலைக்கழகத்தின் பின்பகுதியை விழுங்கிவிடும் அபாயமுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக பல தொன் மீன்களைப் பிடித்து, சேமித்துவைத்து, பதனிட்டு வர்த்தகம் செய்யக்கூடிய கட்டுமானங்கள், இயந்திராதிகள் அங்குள்ளன. குறைந்தபட்சம் சேதவிளைவுகளைக் குறைத்து ஒரு 'மீன்பிடி துறைமுகம்' இயங்குவது காலத்தின் தேவை. இது பற்றிகூட நாம் ஆய்வுசெய்யவில்லை. மாற்றுத்திட்டம் வகுக்கவில்லை. வெறுமனே Paper அரசியலே செய்தோம். மக்களை நம்பவைத்தோம். இந்நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 'அஷ்ரப் துறைமுகம்' என நாமம் சூட்டி ஒரு படிமுறையை அறிமுகப்படுத்தியுள்ளார். எனது பிரத்தியேக பாராட்டுகள் அவருக்கு. அவரிடமிருந்து இயங்குநிலை அரசியலை, சாத்தியமான அடைவுகளை பெறுதல் எனும் பாடங்களை முஸ்லிம் தலைமைகள் மற்றும் எம்.பிக்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அவர் செய்தது சூழ்ச்சி அல்ல – நமது வெறுமையை அவர் ஓரளவு நிரப்பியுள்ளார்.

துறைமுகம் வேண்டாமென்றால் அதன் கட்டடங்கள், அது உள்ளடக்கியுள்ள சாதனங்கள், இயந்திரங்கள் மற்றும் வளங்களை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு உயர்கல்விக்காக ஒப்படைப்போம். அதனை பல்கலைக்கழகத்தின் ஒரு வளாகமாக (Campus) மாற்றலாம். மீன்பிடி பட்டப்படிப்பைத் தொடங்கலாம். விவசாய பீடத்தை ஆரம்பிக்கலாம். கடல்வள கற்கைநெறியை அங்கு உருவாக்கலாம். மாணவர்களுக்கு நவீன கற்கைநெறிகள் மற்றும் பீடங்களை உருவாக்குவது பற்றி அரசின் கவனத்துக்குக் கொண்டுவரலாம். கூடவே ஒலுவிலைப் பாதுகாக்கும், அதன் மண் வளத்தை, கடல் வளத்தை காப்பாற்றும் உபாயங்களை கண்டுபிடிக்கலாம். இல்லாமல் மூடினால் அரசு எதற்கு இதனைப் பாவிக்கும் என்று சிந்தித்தால் அங்குதான் பயங்கரம் உள்ளது. சிங்கள ஏகாதிபத்தியத்தின் படைத்தளமாக துறைமுகம் மாறிவிட்டால் நமது இருப்புக்கு என்ன நடக்கும்? கொஞ்சம் தீவிரமாக அரசியல்வாதிகள் சிந்தியுங்கள். ஜனாதிபதியோடு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேசியது. துறைமுகம் பற்றி எதுவும் கூறவில்லை. மாற்று ஆலோசனைகள் எதனையும் சொல்லவுமில்லை. மக்களியல் அரசியலை முஸ்லிம் கட்சிகள் தொலைத்துவிட்டன. நாம் தடுமாறுகின்றோம். இது தொடரும்.

எவ்.எம்.ஏ.அன்ஸார் மௌலானா



# உலகளாவிய உணவு நெருக்கடியை சமாளிக்க 20 நாடுகளுக்கு அவசர உதவி தேவைப்படலாம்

## ஐ.எம்.எவ். தெரிவிப்பு


உலகளாவிய உணவு நெருக்கடியை சமாளிக்க ஆபிரிக்கா உட்பட 20 நாடுகளுக்கு அவசர உதவி தேவைப்படலாம் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவில் நடைபெற்ற மாநாட்டில் பேசிய அதன் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா, வளைகுடா நாடுகளில் 14 கோடி மக்கள் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், உலகளவில் 48 நாடுகளில் பாதி நாடுகளில் கடும் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர் என்றும், இந்த நிலைமையை எளிதாக்கும் வகையில் உணவு வர்த்தகக் கட்டுப்பாடுகளை எதிர்த்து சர்வதேச நாணய நிதியம் குரல் கொடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# உலக செய்திகள்

### இயற்பியலுக்கான நோபல் பரிசு - 2022:

## பிரான்ஸ் - அமெரிக்கா - ஆஸ்திரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூவருக்கு பகிர்ந்தளிப்பு




2022ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு மூன்று பேருக்கு பகிர்ந்தளிக்கப் படுவதாக தெரிவுக் குழு அறிவித்துள்ளது.

பிரான்ஸைச் சேர்ந்த அலியான் அஸ்பெக்ட், அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் கிளாசர், ஆஸ்திரியாவைச் சேர்ந்த ஷிலிங்கர் ஆகிய மூவருக்கு இவ்வருட இயற்பியலுக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

அமைதிக்கான நோபல் பரிசு நோர்வேயிலும், பிற துறைகளுக்கான நோபல் பரிசு சுவீடன் தலைநகர் ஸ்டோக்ஹோமிலும் அறிவிக்கப்படுகிறது.

நிகழ்வாண்டிற்கான நோபல் பரிசுகள் நேற்றுமுன்தினம் முதல் அறிவிக்கப்பட்டு வருகின்றது. முதல் நாளான திங்கட்கிழமை சுவீடனைச் சேர்ந்த ஸ்வாண்டே பாபேவுக்கு மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இயற்பியலுக்கான நோபல் பரிசு நேற்று அறிவிக்கப்பட்டது. தொடர்ந்தும் இன்று வேதியியலுக்கான நோபல் பரிசும் அதைத் தொடர்ந்து பிற துறைகளுக்கான நோபல் பரிசும் அடுத்தடுத்த நாட்களில் அறிவிக்கப்படவுள்ளன.



# பிரம்மாண்ட தாமரை; 16 சாமிகள்:

## டுபாயில் திறக்கப்பட்ட இந்து கோயில்









டுபாயில் கட்டப்பட்டுள்ள புதிய இந்து கோயில், நவராத்திரி விழாவை முன்னிட்டு நேற்று திறந்துவைக்கப்பட்டது.

டுபாய் - ஜெபெல் அலி பகுதியில் அமைந்திருக்கும் குருநானக் தர்பார் என்ற சீக்கிய கோயிலுக்கு அருகே இந்தக் கோயில் கட்டப்பட்டுள்ளது.

இந்தக் கோயிலில் சிவன், கிருஷ்ணர், கணபதி, மகாலட்சுமி ஆகிய 16 தெய்வங்களின் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பான்மையான சிலைகள் கோயிலின் பிரதான கருவறையிலேயே வைக்கப்பட்டுள்ளன. கருவறையின் மேற்பகுதி மாடத்தில் விரிந்த நிலையிலான இளஞ்சிவப்பு நிறத்தில் முப்பரிமாண வடிவிலான பிரம்மாண்ட தாமரைப் பூ வரையப்பட்டுள்ளது. 105 கொப்பர் மணிகள் இங்கே அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோயில், அதிகாரபூர்வமாக நவராத்திரி தினத்தன்று திறக்கப்பட்டுள்ளது என்றபோதும், சிறப்பு பூஜைகள் மற்றும் நிர்வாக முன்னேற்பாடு பணிகளுக்காக செப்டெம்பர் முதலாம் திகதியே திறக்கப்பட்டுவிட்டது. அன்றுமுதல் கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

குறிப்பாக, வார இறுதி நாட்களில் பக்தர்கள் கூட்டம் அலைமோதுவதாக தெரிவிக்கப்படுகிறது. கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும், சமூக இடைவெளியை உறுதிப்படுத்தவும் கியூ.ஆர். குறியீடு முன்பதிவு நடைமுறை அடிப்படையில் மட்டுமே பக்தர்கள் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

தற்போதைய நிலையில் கோயிலில் 14 பண்டிதர்கள் மூலமாக வேத மந்திரங்கள் மட்டுமே ஓதப்பட்டு வருகின்றன. இவர்கள் 14 பேரும் பிரத்தியேகமாக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு, தினசரி வழிபாடு நடத்தப்படுகிறது. இவர்கள் காலை 7.30 மணிமுதல் 11 மணிவரையிலும், பின்னர் மதியம் 3.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரையிலும் கோயிலில் பூஜை செய்வர்.

# மன்னர் 3ஆம் சார்ள்ஸின் முதல் மக்கள் சந்திப்பு



பிரித்தானிய மகாராணி எலிசபெத்தின் மறைவையடுத்து, ஸ்கொட்லாந்தில் நடைபெற்ற டன்ஃபெர்ம்லைனின் நகரத்திற்கான அந்தஸ்து வழங்கும் விழாவில் பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் கலந்துகொண்டார்.

சுமார் 58,000 மக்கள் தொகையுடன் உள்ள டன்ஃபெர்ம்லைன் ((Dunfermline)) நகரத்திற்கான அந்தஸ்து வழங்கும் விழாவில் கலந்துகொண்ட மன்னர் சார்ள்ஸ் தனது தாயின் ஆழ்ந்த அன்பை நினைவுகூர்ந்தார்.

முன்னதாக, மன்னரை காண நீண்டதூரம் வரிசையாக நின்று நலம் விசாரித்த மக்கள், அவருடன் செல்பி புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.




**மகாத்மா காந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு தலைநகர் டில்லியில் இந்தியா கேட் அருகே கண்கவர் ட்ரோன் கண்காட்சி நடைபெற்றது. காந்தியையும் அவரது வாழ்வுடன் பின்னிப்பிணைந்த நினைவுகளையும் எடுத்துக்கூறும் வடிவங்களில் பல வண்ணங்களில் ட்ரோன்கள் பறக்கவிடப்பட்டன.**

# ஜப்பான் வான்வெளி வழியே வடகொரியா ஏவுகணை சோதனை

## மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறு ஜப்பான் அரசு அறிவுறுத்து; அமெரிக்கா - தென்கொரியா கண்டனம்

ஜப்பான் வான்வெளி வழியே வடகொரியா நேற்று ஏவுகணை சோதனை நடத்தியிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரியாவின் ஏவுகணை சோதனைக்கு அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், ஜப்பான் வான்வெளி வழியே ஏவுகணை பறந்த பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறு ஜப்பான் அரசு அறிவுறுத்தியுள்ளது.




அதிர்ஷ்டவசமாக மக்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்றும், பசுபிக் கடலில் ஏவுகணை விழுந்ததாகவும் ஜப்பான் தெரிவித்துள்ளது. வடகொரியாவின் இந்த நடவடிக்கை, ஒரு பொறுப்பற்ற செயல் என ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபை விதிகளை வடகொரியா மீறி வருவதாகவும் அந்நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன. வடகொரியாவின் இந்த செயல், ஆசிய பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையை பாதிக்கும் என அமெரிக்க வெளியுறவு செய்தித்தொடர்பாளர் நிட் பிரைஸ் தெரிவித்துள்ளார்.



# பாலைவனத்தில் பூத்துக் குலுங்கும் ஊதா பூக்கள்




உலகின் மிக வறண்ட பாலைவனமான சிலியின் அட்டகாமாவில் 3 முதல் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் ஊதா நிறத்திலான பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன.

இந்நிலையில், சிலியிலுள்ள அட்டகாமா பாலைவனத்தில் தேசிய பூங்கா அமைக்கப்படவுள்ளதாக அந்நாட்டின் ஜனாதிபதி கேப்ரியல் போரிக் அறிவித்துள்ளார்.

வழக்கத்திற்கு மாறாக அதிக மழை பெய்யும்போது பாலைவனத்தில் இதுபோன்று பூக்கள் பூக்கும் நிலையில், சுற்றுலாவை மேம்படுத்தும் விதமாகவும் அப்பகுதியை பாதுகாக்கும் விதமாகவும் அங்கு பூங்கா அமைக்கப்படவுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

திருமண தேடல் விளம்பரங்களை
இலவசமாக பிரசுரித்துக்கொள்ள
அரிய வாய்ப்பு!

“ உங்களுடைய
அன்பான மகன் / மகளின்
திருமணத்துக்கு பொருத்தமான
துணையை தேடுகிறீர்களா?
வட்ஸ்அப் ஊடாக எமக்கு
விபரங்களை அனுப்பி வையுங்கள்! ”



தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள எமது வட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு
தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900.
தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805
thamilaneditor@gmail.com

விவாஹா

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7